உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௰௪ | வெகுதானிய, ஆனி | மலர் ௫ |


## பெரும்பற்றப் புலியூர் நம்பி

திரு. S. சோமசுந்தர தேசிகர் அவர்கள், சென்னை.

'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்பது அப்பர் திருவாக்கு. பெரும்புலியூர், சிறுபுலியூர் முதலாய பல புலியூர்களினின்றும் கோயிலான சிதம்பரத்தை வேறு குறிக்க இத்திருப்பதியைப் பெரும்பற்றப் பூலியூரென்றனர் பெரியார்.

தாம் வழிபடும் கடவுளரின் பெயரைத் தம்மக்கட் கிட்டு வழங்குவது மக்கட் சமூகத்தின் பெருவழக்காதலின் பெரும் பற்றப் புலியூரும் நம்பியுடன் சேர்ந்து சிறப்புப் பெயராயிற்று. தமிழ்மக்களறிந்தவரையில் இப் பெரும்பற்றப் புலியூர் நம்பி

என்ற பெயரைத் தாங்கி வாழ்ந்த புலவர் ஒருவரே யாவர். அவரது வாழ்க்கை வரலாற்றினை ஆராய்வாம்.

1

**முதலாவதாக,** நம்பியைக் குறித்து முன்னோர் கூறுவன வற்றை ஈண்டு வரைவாம். இப்பெயரினைப் பலர்க்கும் புலனாகு மாறு செய்த பெருமை மகாமகோபாத்யாய டாக்டர் வே. சாமிநாதையரவர்களுக்கேயுரியது என்பது ஒருவராலும் மறுக்க வொண்ணாச் செய்தியாம். அவர்கள் கூறுவது வருமாறு :—

பெரும்பற்றப் புலியூர்நம்பி யென்பவர் பாண்டி வளநாட் டுள்ள **செல்லிநகரிற்** பிராமண வருணத்தில் ஸ்மார்த்தர்களாகிய வேம்பத்தூர்ச் சோழியர் வகுப்பிற் கௌணிய கோத்திரத்திற் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராசருடைய திருவடிக்கண் மிகுந்த பத்திச்செல்வம் வாய்ந்த குடும்பத்திற் சனித்தவர். இவர்க்குப் பெரும் பற்றப்புலியூர் நம்பியெனவும், இவர் பரம்பரையிற் பிறந்தவரும் மதுரைத் திருப்பணிமாலையிற் கூறப்பெற்றவரு மாகிய ஒருவருக்கு ஆனந்தத்தாண்டவ நம்பியெனவும் பெயர்கள் அமைந்திருத்தலையும் இந்நூற்கடவுள் வாழ்த்திற் பெரும்பற்றப் புலியூர்த் துதி முதலியன அமைந்திருத்தலையும் உற்று நோக்கு கையில் இவர் குடும்பத்தார்கள் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராசர் திருவடிக்கண் மிக்க அன்புடையவர்களென்பது வெளியா கின்றது. இவர் பெயர் தில்லைநம்பியெனவும் வழங்கும்; வேம் பத்தூர்ச் சோழியர்களில் அநேகருடைய இயற்பெயர்களின் பின் நம்பியென்பது சார்த்தப்பட்டுப் பண்டைக் காலத்தில் வழங்கி வந்ததென்பதை அவர்கள் வீட்டிலுள்ள பழைய ஓலைச் சாதனங்களில் இன்றும் காணலாகும்.

இந்நூலை ஆக்குவித்தோனாகிய பாண்டியனொருவன் மிக்க சிறப்புடன் இதனை அரங்கேற்றுவித்துப் பல்லக்கு முதலிய விருதுகளையும் பல இரத்தினாபரணங்களையும் கொடுத்தளித்தா னென்றும், அப்பொழுது இந்நூலாசிரியர் மகிழ்ந்து "பல்லக்கு மேமேலறி" என்னும் வெண்பாவைப் பாடினரென்றும், பின்னர் மகிழ்ந்து இவருடைய சனனபூமியாகிய செல்லிநகரையும்

அதனைச்சார்ந்த ஊர்களையும் இவரும் இவர் பரம்பரையோரும் அனுபவிக்கும்படி முற்றூட்டாகக் கொடுத்தானென்றும், அது பற்றி, செல்லியூரும் அதனைச்சார்ந்த ஊர்களும் செல்லி நாடென்று வழங்கப்பெற்று வந்தனவென்றும், இவர்பரம்பரையோர் மிகுந்த செல்வமுடையவர்களாகிப் பல தருமங்களைச் செய்து விளங்கினர்களென்றும் சொல்லுகின்றனர். இதனை,

கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்லி நாடன் கவுணியர்கோன்
நன்னர்க ளெண்ணிய வானந்தத் தாண்டவ நம்பிகற்பாள்
தென்னவர் போற்றிய வங்கயற் கண்ணம்மை செல்வித்திருச்
சன்னிதிக் கோபுரங் கட்டின டன்மந் தழைக்கவென்றே

என்னும் மதுரைத் திருப்பணிமாலைச் செய்யுளும் வலியுறுத்துகின்றது.

'மேற்கூறிய செய்யுளிற் கூறப்பட்டுள்ள ஆனந்ததாண்டவ நம்பி அம்பிகையின் சந்நிதிக்கோபுரம் கட்டுவித்த காலம், சாலிவாகன சகாப்தம், ௧௧௫௦ — கி. பி. 1227—8; கொல்லம், 402-403 என்று மதுரைக்கோயிலொழுகு தெரிவிக்கின்றமையால், ஆனந்ததாண்டவ நம்பியென்பவர் இற்றைக்கு 700 வருடங்களுக்கு முந்தியிருந்தாரென்றுமட்டும் ஒருவாறு தெரிகின்றது; அதற்குமுன் இந்நூலுடையார் காலம் இவ்வளவினதென்று தெரியவில்லை' (திருவாலவாயுடையார் திருவிளையாடல், முகவுரை; 14-19)

பின்னும், 'சிலநூற்றாண்டுகளுக்குமுன் இந்நூலே எல்லாராலும் படிக்கப்பெற்று வந்ததன்றி, இந்நூலிலுள்ள திருவிளையாடல்களின் முறையையும் இதன் சொன்னடை பொருணடைகளையுமே தழுவிப்பலர் இத்தலசம்பந்தமான நூல்களைச் செய்துவந்தார்களென்று தெரிகின்றது' (பக். 8) என்றும் எழுதப்பட்டுளது.

மேலே காட்டப்பட்ட காரணங்களால் திருவாலவாயுடையார் திருவிளையாடல் என்னும் இப்புராணம் மிகப்பழங்காலத்தது என்ற கொள்கை மக்களிடையே புகுத்தப்பட்டுளது. இக்கொள்கைக்குத் தக்க ஆதாரமுண்டாவெனப் பார்ப்போம்.

செல்விநகரிற் பிறந்த ஆனந்த தாண்டவ நம்பியின் காலம் கி. பி. 1227-8 என்று கோயிலொழுகு கூறுவது உண்மையாகவே இருக்கலாம். ஆனந்ததாண்டவருக்குத் தில்லைநம்பி முற்பட்டவர் என்பதற்கு ஆதாரமொன்றுங் காட்டப்பட்டிலது. ஐயரவர்கள் சொல்வதெல்லாம் 'அதற்குமுன் இந்நூலுடையார் காலம் இவ்வளவினதென்று தெரியவில்லை' என்பதுவே. இச்செய்தியே இந்நூலாசிரியர் காலத்திற்கு ஆதாரம். அவர்களுடைய விருப்பத்தைச் சிரமேற்கொள்ளுவதில் யாதொரு வேறுபாடுமில்லை. ஆனால் இது காலவேற்பாட்டிற்கும் ஆராய்ச்சிக்கும் நிற்குமா என்பதுவே கேள்வி.

இரண்டாவதாக, இந்நூலின் செய்யுட்கள் பல 'பழைய உரைகளின் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டு வந்தன' வென்று கூறி, அதற்கு எடுத்துக் காட்டாக அவர்கள் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளைக் கூறுகின்றார்கள். திருப்போரூர்ச் சுவாமிகளது காலம் 18-ம் நூற்றாண்டாகும். இவர்களது ஆசிரியரான சாந்தலிங்க சுவாமிகளது காலமே பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகலின் அவரது சீடரான சிதம்பர சுவாமிகள் காலம் பதினெட்டாம் நூற்றாண்டு என்பது மறுக்க முடியாத செய்தியாகும். அவர் இத்திருவிளையாடலிலிருந்து இரு செய்யுள்களை மேற்கோள்களாகக் காட்டினரென்பது பழைமைக்கு ஆதரவாகாது என்பது ஐயரவர்களும் ஒப்பக் கூடிய செய்தியே.

மூன்றாவதாக, வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தமது பாக்களைத் திருவிளையாடற் புராணத்தில் இடைமடுத்துள்ளதாகக் கூறப்பட்டுளது. தம்பிரான் சுவாமிகளுடைய காலம் பதினேழாம் நூற்றாண்டாகும். சுவாமிகளுடைய சீடரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவரென்பது எல்லோரும் அறிந்த செய்தி. ஆகவே வெள்ளியார் தமது பாக்களை இடைபடுத்ததால் தில்லை நம்பியின்காலம் பழைமையுடையதாகாது.

பின்னும் காட்டக்கூடிய பற்பல காரணங்களினும், மேலே காட்டிய மூன்று காரணங்களைக்கொண்டே தில்லை நம்பியின் காலம் மிக்க பழைமையுடையதன்றென்பது தெளிவாகும்.

2

**சாஸனத் தமிழ்க்கவி சரிதம்** என்ற நூலின் ஆசிரியர் கூறுவது வருமாறு:—

'இப்பெயர்பெற்ற புலவர், திருவாலவாயுடையார் திருவிளையாடலை இயற்றியவர் என்பதும், வேப்பத்தூர்ச் சோழியப் பிராமண வகுப்பினர் என்பதும் பிறவும் அந்நூற்பதிப்பின் முகவுரையுள் மகாமகோபாத்யாய — ஐயரவர்கள் எழுதிய ஆசிரியர் வரலாற்றால் தெரிய வருகின்றன. இந்நூலாசிரியரான நம்பியைப்பற்றிய குறிப்பு சாஸனத்தாலும் சிறிது அறியப்படுவதாம். இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர்ச் சிவாலயத்தின் தெற்குத் திருமதிலிற்கண்ட சிலாலிகிதமொன்று மாறவர்மன் குலசேகர பாண்டியனது (பட்டம். 1267) 36-ம் ஆட்சியாண்டில் அமைந்ததாக உள்ளது. இதனுள் மேற்குறித்த கோயில் அருச்சகர்களால் பெரும்பற்றப்புலியூர்நம்பி என்பார்க்கு நிலங்கள் சில அளிக்கப்பட்ட செய்தி காணப்படுகின்றது. இங்ஙனம் உதவப் பெற்றவர் திருவிளையாடற்புராணவாசிரியரோ வேறுபிறரோ என்பது தெளிவுபடவில்லை. ஆயினும், கோயிற்றலத்தாரும் அதிகாரிகளும் புலவர்க்கு அவர் பாடல்பெறும்பொருட்டு நிலமுதவி வந்தனர் என்பது சாஸனங்கள் பலவற்றால் அறியப்படுகின்றமையின், அம்முறையில் மேற்கூறிய அருச்சகர்களால் உதவப் பெற்றவர் திருவிளையாடலாசிரியரான பெரும்பற்றப்புலியூர் நம்பி போலும் என்று கருத இடமுண்டு. ஆனந்தத்தாண்டவ நம்பி என்பார் இவ்வாசிரியரின் மரபினர் என்றும் அந்நம்பியின் மனைவி சகஸ்ரு 1150 (கி.பி. 1227)ல் மதுரை ஸ்ரீமீனாட்சிசந்நிதி மூன்று நிலைக்கோபுரம் கட்டிவைத்தவள் என்றும் சொல்லப்படுகின்றன. இதுகொண்டுநோக்கின், பெரும்பற்றப்புலியூர்நம்பிக்கு ஆனந்தத்தாண்டவநம்பி காலத்தால் நெருங்கிய முன்னோராதல் வேண்டும். திருவாலவாயுடையார் திருவிளையாடல் 'கார்வளங் கொள் மண்டிலத்துக் கப்பிஞ்சி நாட்டுரைக்கப்' பட்டதென்று, அப்புராணப் பாயிரங்கூறும். கப்பிஞ்சி நாடு என்பது இப்போது திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்துள்ள மருங்காபுரி ஜமீனின் பகுதி என்பர். இந்நாட்டுக்கும், பெரும்பற்றப்

புலியூர் நம்பியின் சாஸனம் அமைந்துள்ள திருப்புத்தூர்ப் பிரதேசத்துக்கும் இடைப்பட்டதூரம் பெரிதன்று என்பதும் அறியத்தகும்.

மேலே காட்டியதுகொண்டு **சாஸனத் தமிழ்க் கவிசரித** ஆசிரியர் முதலில் கல்வெட்டிற் கண்டவரும் திருவிளையாடற் புராண வாசிரியரும் ஒருவரோ அன்றி வேறு வேறானவரோ என ஐயப்பட்டனரேனும் முடிவில் இருவரும் ஒருவரேயென்று கொண்டனர் என்று கூறுவது பிழையாகாது. நம்பியின் வரலாறு கூறிய ஆசிரியர் மதுரை மீனாட்சி தேவாலயச் சன்னதிக் கோபுரங்கட்டியவளின் கணவனான ஆனந்தத் தாண்டவ நம்பிக்கு வெகுகாலம் முற்பட்டவர் விளையாடல் ஆசிரியர் என்று கூறுகிறார். **கவிசரித** முடையார் 'பெரும்பற்றப் புலியூர் நம்பிக்கு ஆனந்தத்தாண்டவநம்பி **காலத்தால் நெருங்கிய முன்னோராதல் வேண்டும்**' என்று கூறுகிறார். இவர்கள் தம் முரண்பட்ட நிலையை வாசகர்களே நன்கு அறிந்துகொள்வரென்பதில் ஐயமில்லை. இனி கவிசரிதமுடையார் கூற்றுக்கு ஆதாரமாகவிருப்பது இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள திருப்புத்தூர் சிவாலயத்தின்கண் காணப்பெறும் கல்லெழுத்தாகும். இக்கல்லெழுத்து 1908-ம் ஆண்டு 133-ம் இலக்கமாகக் கல்வெட்டுத்துறையாரால் பதிவு செய்யப்பட்டுளது. அவர்கள் குறிப்பு வருமாறு :—

** 133 of 08 on the south wall of the second prakara of the temple:—*

A damaged record in the thirty sixth year of the Pandya King Maravarman alias Tirubuvana Chakravarthi Kulasekhara Deva (I 1268—1308) 'who was pleased to take every country' records gift of land to a certain Perumbarrap-puluyur Nambi by the temple priests; records that in the 34th year of the reign of the king a certain Valluvanadalvan took possession of the village and dispossessed the donee of his lands.

---

* I am indebted to the Epigraphical department for allowing me to have a copy of the inscription.

[இது பாண்டியவரசனுன எம்மண்டலமுங் கொண்டருளிய திருபுவன சக்காவர்த்தி குலசேகரதேவரான மாறவர்மனது 36-ம் ஆட்டையது; சிதைவுபட்டது. ஒரு பெரும்பற்றப் புலியூர் நம்பிக்குக் கோயிலர்ச்சகர்கள் இட்டதானத்தைக் கூறுவது. அரசனது 34-ம் ஆண்டில் வள்ளுவநாடாள்வான் கிராமத்தையே கைப்பற்றிக்கொண்டு தான சாசனம் பெற்றவனது நிலத்தையும் பிடுங்கிக்கொண்டான்.]

இவ்வளவே கல்வெட்டுத்துறையார் குறிப்பு. இனி அச்சாசனம் வருமாறு:—

மெய்க்கீர்த்திக்குமேல் திரிபுவனசக்கரவர்த்திகள் எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ குலசேகரதேவர்க்கியாண்டு ௩௰௬-வது வைகாசிமீ 8உ கேரளசிங்கவளநாட்டுப்ரஹ்மதேயம் திருப்புத்தூர் அக்கிநம்பி ஆட்கொண்ட பிள்ளையான பெரும்பெற்றபுலியூர் நம்பிக்கும் மக்களுக்கும் உடையார் திருத்தளியாண்ட நாயினுர் கோயில் ஆதிசண்டேசுரதேவ கன்மிகளும் பஞ்சாசாரியஞ் செய்வார்களும் மாடாபத்தியம் அபிமுத்திச்சுரமுடையார்களும் பிடிபாடு பண்ணிக்கொடுத்த பரிசாவது வள்ளுவநாடாழ்வார் ஆளா கைக்கொண்டு வந்திருந்து நிச்சையிப்பு ஒழியச் சிலகாசாற் செய்துதர வேணுமென்று அக்ரமான்யமாக இது............என்படஃதேய்; பெரும்பற்றப்புலியூர் நம்பியும் இவனுச்சரும் புறம்பே போய் நிற்க, அகப்பட்ட சபையாரையும் ஒங்களையும் அடைத்துவைத்து அநியாயத்தாலே பெரும்பெற்றப் புலியூர் நம்பி காணியையும் எம்பிலேயும் மலையையும் குறிச்சியையும் இ வள்ளுவநாடாழ்வார் பிடிச்சுக்கொண்டு திருவாபரணத்தையும் எடுத்துக்கொள்ளுகையில் இசிலங்கள் இன்று அறுதியாக திருமுகங்களும் வழக்காய்க் கிடக்கையில் இங்காளிலே வீரவேளத்தில் உடையார் முனையதரையர் சபையாரையும் எங்களையும் ஏற்றிப் பெருமாள் திருமுன்பே விண்ணப்பஞ் செய்த அளவில் இப்பெரும்பற்றப் புலியூர் நம்பி குற்றஞ்செய்யாதபடியாலே இவன் காணிபெறக் கடவனென்றும் தீட்சைதரமாக நாயனுர்க்கும் பிராமணர்க்கும் இடக்கடவனென்றும்

முடிமன்னர்கட்கு மகட்கொடைக்குரிய வேளிராகிய குறுநில மன்னர்கட்கு வழங்கிவந்த செய்தி ஈண்டு சிந்திக்கத்தக்கது.

புறப்பாட்டில் 'ஒரு சிறைப் பெரியனுர்,' 'மருதனிளகனுர்' 'கருவூர்க்கதப்பிள்ளை' என்னும் பண்டைத் தமிழ் வாணர்கள் பாடிய நாஞ்சில் வேளின் பெயர் 'வள்ளுவன்' எனச் சுட்டப் படுகிறது. அஃது அச்சிற்றரசன், சேர அரசன்மாட்டு அன்புடையனுய், அவனுக்குத் துணைநின்று, அச்சேர அரசன் கொற்றத்து அருங்கடம் பூண்டு * உள்படு கருமத்தலைவனு யிருந்தபடியால், எய்தியபட்டப் பெயராகும்,

இஃது, "கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி" என்னும் பாண்டிய அரசனுடைய உள்படு கருமத்தலைவராயிருந்த திருக்குறள் ஆசிரியராகிய நெடுமாறருக்கு ஏற்பட்ட "வள்ளுவர்" என்னும் பட்டம் போன்றது. அந்த நெடுமாறன் வள்ளுவனுரும், வேளிர் குலத்திற் பிறந்து, சில காரணங்களால் வள்ளுவர் குலத்தில் வளர்ந்து பிறகு வேளிர் குலத்து மகளிரையே மணந்து, பாண்டியனிடத்து உள்படு கருமத்தலைவராகி 'வள்ளுவன்' என்னும் பட்டம்பெற்று, "திருக்குறள்" என்னும் பெயரிய நூலை இயற்றினர்.

"மன்னர் உள்படு கருமத்தலைவர் ‡ வள்ளுவர்" என்று "சேந்தனுர் திவாகரம்" கூறுமாற்ருனும், இப்பெயருண்மை அறியலாகும்.

முற்காலத் தமிழகத்தில் வள்ளுவசாதி என்று ஒரு சாதி கிடையாது. தொல்காப்பியம், 'துடியர்—பாணர்—பறையர்—கடம்பர்' எனப்பேசுவதல்லது வள்ளுவ சாதியைப்பற்றிப் பேசுமாறில்லை.

---

*உள்படு கருமத்தலைவர் என்பதற்கு—அரசர் கீழ்க் காரியத்தலைமை வகிக்கும் அதிகாரி என்பது பொருள்.

‡அரசர்க்குக் கருமத்தலைவாய் உயர்ந்த பதவி வகித்தவர்க்கு 'வள்ளுவன்' என்ற சிறப்புப்பெயர் முன்பு வழங்கத்தலைப்பட்டது. அரசனது கருமத்தலைவனுயிருந்தது பற்றியே இப்பெயரை அவன் பெற்றிருத்தல் வேண்டும் "ஸ்ரீசோகிரத்துப்பருடையாரும்......இராயசேகராயின வள்ளுவருங் கூடிச் செய்த கச்சமாவது" என்ற சாசனத் தொடரும் இக்கருத்தினையே வலியுறுத்துதல் காண்க. (S. I. I. Vol. V. No. 776) மு. ரா.

அக்காலத்தில் புலைக்குல வகுப்பினராகிய பறையருக்கு 'வள்ளுவர்' என்னும் பட்டம் வழங்கவில்லை.

சாதாரணமாகப் பறையர் சாற்றும் பறையும், அதை அவர் அறையும் முறையும் வேறு. ஆனால், வள்ளுவரோ.

"அரசு கொற்றத் தருங்கடம் பூண்டவர்
கோற் றெழில் வேந்தர் கொற்ற முரசும்
பெரும் பணைக் கொட்டிலுள் அரும்பலிஓச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கரையார்"

எனப் பெருங்கதை பேசுகின்றது.

(காண்டம் 2. பகுதி: 2 வரி. 29-33)

மேலே கூறிய மூன்று நாட்களிலும்தான் வள்ளுவர், என்பார், தமிழ் முடியரசர் இமிழ்கடிமுரசை, வச்சிரக்கோட்டத்தினின்றும் எடுத்து, யானைப்பிடர்த்தலை யேற்றி அரசனையும், அனைவரையும் வாழ்த்தி முரசறைவர். வேறு காலங்களில் செய்யார்.

அத்தகைய வள்ளுவரை 'முதுகுடிப் பிறந்தோன்' ஆகவும், 'உயர்ந்தோன்' ஆகவும், 'மணிமேகலை' (விழா—27-28) யிலும், பதிற்றுப்பத்திலும், (30) கூறியிருக்கிறது.

வேந்தர் பெரும்பணைக் கொட்டில் உள்ளும், வச்சிரக்கோட்டத்துள்ளும் (கோட்டம்—கோவில்) சென்று பலியிட்டுப் பூசை செய்து முரசையெடுத்து வேழத்தின் பிடர்மிசை ஏற்றி "மறவரும் தேரும் மாவுங் களிறும் சூழ்தர" உலகை அரசொடுவாழ்த்தி அணிவிழா அறையும் வள்ளுவனை இழிகுலப் புலைமகனாகக் கருத இடமுண்டா? என்று பாருங்கள்.

பறையைக் கழுத்திலிட்டறைந்து காலால்நடந்து கரையும் பறையரின் குலம்வேறு.

முரசத்தை யானையின் பிடர்த்தலையேற்றி, சேனைகள் சூழ்தர வேழமேறி உலகையும் அரசையும் வாழ்த்தி அணிவிழா

அறையும் வள்ளுவரின் குலம்வேறு என்று கொள்ளக்கிடக்கின்றது.

அத்தகைய வள்ளுவரைத் ‘தொல்குடிப்பிறந்தோன்,’ ‘முதுகுடிப்பிறந்தோன்’ எனக்கூறியிருக்கத் தற்காலம் பறையரின் குலகுருவகுப்பினராயுள்ள வள்ளுவரில் ஒருவர் என்று கொள்ளுவதற்குச் சான்று சிறிதேனுங் கிடையாது.

புறநானூறு 137, 138, 139, 140, 180-ஆம்செய்யுட்களால் புகழப்பெற்ற ‘நாஞ்சில் வள்ளுவன்’ என்பான், மேலே கூறிய நாஞ்சில் நாட்டுவேளாகிய சிற்றரசன் ஆவான்.

இனி இவ்வரசனது அருங்கொடையைப்பற்றியும், சிறந்த புகழைப்பற்றியும், இரப்போர்க்கு இல்லையென்னாதீயும் இனிய குணத்தைப்பற்றியும், பாடும் புலமையில் வல்லார்களாகிய ‘ஒரு சிறைப் பெரியனார்,’ ‘மருதனிளநாகனார்’ ‘கருவூர்க்கதப்பிள்ளை’ என்னும் புலவர் பெருமக்களால் பாடப்பட்டுள்ள பாட்டுக்களை இதன்கீழ்க் கூறி இச்சட்டுரையை முடிப்பாம்.

அரிசிகேட்க யானைகொடுத்த நாஞ்சில் வள்ளுவனை மருதனிளநாகனார் பாடியது.

## அகவல்

*தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர் !
வளைக்கை விறலியர் *படப்பைக் கொய்த
வடகின் † கண்ணுறைபாக யாஞ்சில
வரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்க ‡‡ டறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே ! யன்ன தோர்
தேற்றா வீகையு முளது கொல் !
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே. (புறம். 140)

*‘தடவுநிலைப்பலவி’ ‘தேற்றா வீகையு முண்டுகொல்’ என்பன பாடபேதங்கள். * படப்பை=மலைப்பக்கம். † கண்ணுறை=மேல்தூவுவது. ‡‡கடறு=சுரம்.

இச்செய்யுளை, தமிழ் மூதாட்டி அவ்வையார் பாடியதென்றும் கூறுவர்.

செவ்விய நாவையுடைய புலவீர்! வளையணிந்த கையையுடைய விறலியர் மனைப்புறத்தின் கண் பறித்த இலைக்கு மேலே தூவுவதாக யாங்கள் சிறிது அரிசி வேண்டினேம் அஃ துணர்ந்த பரிசிலர்க்கு உதவும் முறைமை யறிதலால், அவ் வள்ளல் எம்முடைய வறுமைப் பிணியைப் பார்த்ததேயன்றித் தன் மேம்பாட்டிற்குத் தக்கதொரு மலையென நிகரும் பெரிய யானையை அளித்தனன். ஆகவே, பெரியோர்கள் தாங்கள் தக்கார்க்குச் செய்யும் முறையைத் தெரிந்து பாதுகாத்துச் செய்வார் என்பது பாட்டின் பொருள்.

ஒரு சிறைப் பெரியனார் பாடியது:—

## அகவல்

"இரங்கு முரசி னினஞ் சால் யானை
முந்நீ ரேணி விறல் கெழு மூவரை
யின்னு மோர்யா னவாவறி யேனே
நீயே, முன்யா னறியு மோனே! துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது
கழைக் கரும்பி னொலிக்குந்து
கொண்டல் கொண்டநீர் கோடை காயினுங்
கண்ணன்ன மலர்பூக்குந்து
கருங்கால் வேங்கை மலரி னாளும்
பொன்னன்ன வீசுமந்து
மணியன்ன நீர் கடற் படருஞ்
செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந!
சிறுவெள் ளருவிப் பெருங்க லடானே
நீவா ழியர்நின் றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே." (புறம். 137)

நீர் நிறைந்த பள்ளத்தின்கண் விதைத்த வித்தானது நீரில் லாவிடினும்; கரும்புபோல் செழிப்புற்றுத் தழைக்கும்; மழை யால் முகந்து, சொரியப்பட்ட நீர், கோடை காலத்தும் மகளிர் கண்போல்வதாகக் குவளை முதலிய மலர்கள் மலர்ந்து இருக்கும். கரியதாளையுடைய வேங்கைமரமானது நாடோறும் பொன்

போலும் பூவைத் தன்னிடத்துச் சுமந்திருக்கும். மணிபோலும் நீரானது கடற்கண் செல்கின்ற செழுமையான மலைப்பக்கத்தை யுடைய நாஞ்சில் என்னும் மலையையுடைய வேந்தே!

ஒலிக்கின்ற முரசினையும், மிகுந்த யானைப் படையினையும், கடலாகிய எல்லையையுமுடைய இந்நிலத்தின்கண்ணே யான் இன்னமும் மூவேந்தரைப் பாடினேனில்லை. நீதான் எனக்கு முன்னே தொடங்கி அறியும் வள்ளல்;

சிறிய அருவிகள் ஒல்லென வீழாநின்ற பெரிய மலையை யுடைய நாட்டையுடையாய்! நீ நெடுங்காலம் வாழ்வாயாக; நின்னைப் பெற்றோராகிய தாய் தந்தையரும் வாழ்வாராக: என்பது இச்செய்யுளின் பொருள்.

இச்செய்யுளில் நாஞ்சில் வள்ளுவரின் கொடைத்திறம் எத்துணை சிறந்ததாகக் காண்கின்றது. அன்றியும், அப்புலவர் பெருந்தகை, 'யான் இன்னமும் மூவேந்தரைப் பாடினே னில்லை; நீதான் எனக்கு முன்னே தொடங்கி அறியும் வள்ளல்' என்று விதந்து கூறுவதனால், வள்ளல் இரவலன்பால் வைத்த பேரன்பும், அவன் தகுதியறிந்து நல்கிய பரிசும், மிகுதியும் பாராட்டற்குரிய தகுதியுடையதென்றும் அறியப்படுகிறது.

இதுவும்—மருதனிளநாகர் பாடியது :—

ஆனினங் கலித்த வதர்பல கடந்து
மானினங் கலித்த மலையின் ஒழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
யுள்ளி வந்த வள்ளுயிர்ச் சிறியாழ்ச்
சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண
நீயே பேரெண் ணலையே நின்னிறை
மாறி வாவென மொழியலன் மாதோ!
யொலியிருங் கதுப்பி னாயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மரனணி பெருங்குர லனைய னாதலி
னின்னை வருத லறிந்தனர் யாரே'' (புறம் 138)

வள்ளிய ஓசையுடைத்தாகிய சிறியயாழையும், சிதாராகிய உடையையுமுடைய மூத்தபாணரே! நீதான் நாஞ்சில் வள்ளுவனாகிய பெருந்தகையிடத்துச் சிலவற்றைக் கருதிப் போகின்றமையின், பெரிய எண்ணங்களையுடையை; நின்னுடைய தலைவன் இப் பொழுது போய்ப் பின்பு ஒருநாள் பரிசிற்கு வா வென்றும் கழறான்; கிளிப்பிள்ளைகள் மருவிய அகன்ற புனத்தின் கண்ணே

பெரிய கதிர்களை அவன் ஒப்பாளுதலின், நீ அவன்பாற் பரிசு பலபெற்று வருமிடத்து நின்னைப் பழையபாணன் என்று அறிவார் யார்? என்பது பாட்டின் பொருள்.

"சுவலழுந்தப் பலகாய
சில்லோதிப் பல்லிளைஞருமே
யடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவ
லோடாப் பூட்கை யுரவோர் மருக!
வுயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந!
மாயா வுள்ளமொடு பரிசி றுன்னிக்
கனிபதம் பார்க்கும் காலை யன்றே.
யீத லானுன் வேந்தே! வேந்தற்குச்
சாத லஞ்சாய் நீயே யாயிடை
யிருநில மிளிர்ந் திசி ஞூஅங் கொருநா
ளருஞ்சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே."

(புறம். 139.)

"இவரைப் பலபடப் புனைந்து வாழ்தலை விரும்பிப் பொய் சொல்லேன்; மெய்யே சொல்வேன்; புறங்கொடாத வலியோர் மரபில் உதித்தோனே! உயர்ந்த உச்சியையும் உடைய மலைக்கு அரசே!

நின்னுடைய அரசன் நினக்கு வேண்டியவற்றைக்கொடான். அதுபொழுது நினக்கும், அரசனுக்கும் ஒருநாள் பூசலேனும் வரும். நீயும் அரசன் பொருட்டுச் சாதலுக்கு அஞ்சாய்! அதற்குள் வறுமையால் பீடிக்கப்பட்டு வாடிய என் சுற்றமானது மிகவும் துன்புறும். ஆதலால்,

'போர்வருவதற்கு முன்னரே எனக்குப் பரிசில்தந்து விடுவாயாக என்று நீ கூறி அவனிடத்துப் பரிசில் பெறுவாயாக' என்பது பாட்டின் பொருள்.

இவைகொண்டு வள்ளலாகிய இவ்வள்ளுவரிடத்துச் செல்கின்றவர் எதனையும் நிச்சயமாகப் பெற்றே வருவரென்பது புலவர்கள் தம் வாக்குளால் நன்கு தெளியப் பெறுகின்றது.

'கருவூர்க் கதப்பிள்ளை' என்னும் புலவர் பாடியது:—

"தென்பவ் வத்து முத்துப் பூண்டு
வடகுன் றத்துச் சாந்த முரீஇ

........................ங்கடற்றானை
யின்னிசைய விறல் வென்றித்
தென்னவர் வயமறவன்
மிசைப் பெய்தநீர் கடற்பரந்து முத்தாகுந்து
நாறிதழ்க் குளவியொடு கூதளங் குழைய
வேறு பெ..................................த்துந்து
தீஞ்சுளைப் பலவி னாஞ்சிற் பொருநன்
றுப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மைய
னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்
வல்வேற் கந்த னல்லிசை யல்ல
...........................த்தார்ப் பிள்ளையஞ் சிறாஅ
ரன்ன னாகன் மாறே யிந்நில
மிலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே.''

(புறம். 380)

மேற்குறித்த செய்யுட்களும், அவற்றின் பொருள்களும் வள்ளல் பெருந்தகையாகிய நாஞ்சில் வள்ளுவரின் கொடைத் தன்மையையும், அரும்பெரும் மேன்மைக்குணத்தினையும், அழகு பெற எடுத்துக்கூறுகின்றன. மற்றும் அவனது சீரிய ஒழுக்கநலம், செம்மைசான்ற புகழ், கருணைப்பெருக்கம், இரவலரின் தகுதியறிந்து ஈயும் வண்மை, அஞ்சாவீரம், யாரும் மதிக்கும் அறிவின் செயல் ஆகிய அரும் பெருந் தன்மைகளும் தெளிவாக அறியப்படுவதோடு, அவன் கடையெழுவள்ளல்களைப்போல் வரையாதளிக்கும் வள்ளன்மையனாகவும், சிறந்த போர்வீரனாகவும், முடியுடை வேந்தர்க்கு உறுதுணைவனாகவும், சேரனால் '**வள்ளுவன்**' என்னும் பட்டம் பெற்றவனாகவும், புலவர்=பாணர்—கூத்தர் முதலியோர்க்கு இல்லையென்னாதீயும் ஈகையாளனாகவும், தகுதியறிந்தீயும் சதுரனாகவும், இரவலர், புலவர் முதலியோருடைய தரத்தை அறியும் அறிவுடையவனாகவும், வேளிர்குலத்துத் தலைவனாகவும் விளங்கியிருந்தனன் என்பவற்றையும் நன்கு உணர்த்துகின்றன.

இவ்வேளிர் குலத்து அரசனை, தற்காலம் '**வள்ளுவர்**' என்று வழங்கும் வள்ளுவ சாதியைச் சார்ந்தவன் என்று கூறுவார் கூற்று வலியுடைத்தாகாது. சங்க இலக்கியங்களை ஆராய்ந்து தெளிந்தார்க்கு உண்மை புலனாம்.

௮

# இந்தியநாட்டின் பல்கலைக் கழகங்கள்.

(18—6—38-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் Rt. Hon'ble திரு. V. S. சீனிவாச சாத்திரியார் சென்னையிலிருந்து வான ஒலிபரப்பியில் பேசியதன் சாரம்.)
[Madras Mail 19—6—38.]

காந்தி அடிகள் பல்கலைக்கழகங்களைக் குறித்து அண்மையில் கூறியசெய்தியை அனைவரும் அறிவர். பல்கலைக்கழகங்களைப் போற்றிவளர்ப்பது அரசியலாரின் பொறுப்பல்ல. பட்டதாரிகளை (Graduates) வேலையில் அமர்த்திக்கொள்ளுவோரும் தொழிற்சாலைத் தலைவர்களும் கொடுக்கும் வைப்பு நிதிகளும், மாணவர் கட்டணங்களுமே இக்கழகங்களைத் தாங்கும் பொறுப்புடையன, என்பது அவர்கருத்து. அடிகளின் கூற்று எதுவானாலும் அதனை ஆராயாமலே ஏற்றுக்கொள்ளுவது இந்த நாட்டின் மனப்பான்மை ஆகிவிட்டது.

உயர்தரக் கல்வியில் அக்கறையுடைய மக்கள் இக்கொள்கையை மிகக் கவலையுடன் சிந்திக்கத் தொடங்குவதில் வியப்பு என்ன? இக்காலத்தில் உயர்தரக் கல்வியானது மிகமிகச் சிறக்கவேண்டும்; மிகவும் பரவவேண்டும்.

உலகெங்கும் அரசர்கள் கல்வியின் பொருட்டு அளவிறந்த பொருட்கொடை புரிகின்றனர்; பண்டைக்காலத்தே இந்தியாவிலும் அதுவே பெருவழக்காயிருந்தது. காந்தியடிகளின் கொள்கை நிலவுமாகில், நமது கல்லூரிகள் பாரிசவாதநோய் பட்டாலொப்ப மாய்ந்துபடும். வரிச்சுமையானது பெரும்பாலும் ஏழைகளைச் சார்ந்திருப்பதால், அதன் நலன்கள் இயல்புடைய மக்களுக்கு ஆவது நேர்மையன்று என்பதே இக்கொள்கையின் உள்ளீடான நோக்கம்—பொதுமக்களின் பொருள் தொடக்கக் கல்விக்கே உரியது; அதற்கே போதிய

பொருளில்லாத நிலையில் ஒவ்வொருகாசையும் அதற்கே செல விட்டு மக்களனைவரையும் தொடக்கக் கல்வியேனும் உடையராக் குதல் கடமையாகும் என்பதுதான் அடிகளின் கருத்து.

தொடக்கக் கல்வியின் இன்றியமையாமையை மறுப்பார் எவரும் இல்லை. கலைக்கழகங்களைப் போற்றி வளர்ப்பது அரசி யலார் பொறுப்பன்று என்பது தவறுபட்ட கொள்கையாகும். தொடக்கக் கல்விக்கும், உயர்தரக் கல்விக்கும் முரண்பாடு ஒரு போதுமில்லை.

கலைநூற் புலமைமிக்கோர் தம்மையொத்த கற்றார்க்கே யன்றி, நாட்டு மக்கள் அனைவர்க்கும், தமது நுண்மதியாலும், உழைப்பாலும் பல்வகையில் நலம்புரிகின்றனர். பல்கலைக்கழ கப்பயிற்சியால் மேதகவு எய்திய புலவர்களின் திறமைகளும், தொழிற்பண்புகளும் இன்றேல் பொதுமக்கள் முன்னேறவும், மேன்மை எய்தவும் வழியே கிடையாது.

தத்துவநூல், காவியம், சரிதம், சிற்பம், ஓவியம், மருத்து வம், அறிவுநூற்பயன்கள், ஆராய்ச்சிச்சாலைகள், நூல்நிலையங்கள் ஆதிய நாகரிகச் சிறப்புகள் வேண்டுவதில்லை என அரசியலார் பேறு முனையால் கட்டளை பிறப்பித்தால், அவற்றை இழந்த மனிதர்களின் வாழ்க்கை எத்துணைக் கீழ்நிலையை எய்திப் பாழ் படுமென்பதனை உன்னிப் பாருங்கள்.

அருங்கலைப்பயிற்சியும், அறிவுநூலாராய்ச்சியும் பயனற் றவை என்று கருதுவோரும் உளர். இவற்றின்பொருட்டு, பல் கலைக் கழகங்கள் செலவிடும் பெருந்தொகைகள் வீணே தொலைக்கப்படுவனவாம் என்பது அன்னார் கருத்து. ஆனால் மனிதரின் அறிவுக்களஞ்சியத்தில் மேற்படி கலையறிவாராய்ச்சி யில் ஒரு சிறிது சேர்க்கப்படுமாயினும் அது விலைமதிக்க வொண்ணாதது எனக் கருதுவதே மதியுடைமை ஆகும்.

ஆராய்ச்சித்துறையில் ஆயிரக்கணக்கினரான அறிஞர்கள் முயன்றாலும், ஒருசிலர்தான் வெற்றியுடன் திகழுதல்கூடும். இது மறுக்கமுடியாத உண்மை. கல்வி, கலைத்திறம், தொழிற் றிறமாதிய துறைகளில் உழைப்பும், பொருளும் பனையளவு

செலவிட, தினையளவு பயன் தான் கிட்டுகின்றது. இது தவறாத இயற்கையின் முறை.

கலைவாணர்களின் உழைப்பின் பயன் சடுதியில் கைகண்ட தொன்றாய் வாய்ப்பதில்லை. வானநூற்புலவர் தினமும் ஒரு விண்மீனையோ, வால்மீனையோ புதிதுபுதிதாய்க் காணமுடியாது. ஒவ்வொரு ஆராய்ச்சியாளரும், மாணவர்களுடன் இடைவிடாத தொடர்புவைத்துக்கொள்ளுதல் அவசியம். பேராசிரியரின் நெருங்கிய தொடர்பால் மாணாக்கர் அறிவு விளக்கமும், ஊக்கமும் பெறுவர். நுண்ணிய மனவொருமைப்பாட்டால் ஆசிரியர் ஒடுக்கத்தில் அடங்காது, கல்வியில் ஆர்வமுடைய மாணவரின் கூட்டுறவால் விழிப்படைந்து விளக்கமும் பெறுவர்.

சுகமான வாழ்க்கையில் அமர்த்தப்பட்டு, உழைப்பின் பயனை விரைவில் தெரிவிக்கும் கடமையில்லாத நிலையில் வைக்கப்படும் ஆராய்ச்சிப் புலவர்கட்கு நேரும் பெருந்தீங்கு மற்றொன்று உண்டு. அஃதாவது அவர்கள் ஊக்கமிழந்து சோம்பேறிகளாதல் கூடும். ஆராய்ச்சி உலகத்தில் உழைப்பின் அளவையும், விளைவும் பயனையும் திட்டமாய்க்கணிக்கவும் சோதித்தறியவும் முடியாது. இத்தகைய சோதனைகள் இல்லாவிடத்து, ஊதியங்களாகத் தரப்பெறும் பொருள் அவமே கழியலாகாதெனும் பெருங்கடமையை உணரும் பொறுப்புடைமையைத் தவிர வேறு பாதுகாப்பின்று.

உயர்ந்த அறிவாளிகளின் கூட்டத்தும் இத்தகைய உண்மையான மனச்சான்று உடையவர்களைக் காண்பது எத்துணை அருமையாயிருக்கின்றது? நமதுநாட்டிலுள்ள திருக்கோயில்களையும், சமய நிலையங்களையும் பாருங்கள். தருமகர்த்தர்களாயுள்ளவர்கள் தமது அலுவல்களை அவ்வப்போது சோதிப்பவர்களோ, குறைபாடுகளை எடுத்துக் காட்டுபவர்களோ, இல்லாதபடியாலும், உலகியலதிகாரத்திற்கு அப்பாற்பட்டு இருந்தவர்தமையாலும், தமது ஆளுகையிலுள்ள சொத்துக்களைத் தங்கள் உடைமையாக எண்ணிப் பஞ்சணையில் உறங்கத் தலைப்பட்டனர். வழிபடு

வோர்களோ பத்திமேம்பாட்டாலும், நம்பிக்கை மிகுதியாலும் காணிக்கைகளை வரையாது கொடுத்துக் கொடுத்து வந்தார்களே யன்றி, தாங்கள் பெற்ற பயனே யாதுமில்லை. காலப்போக்கில் இந்த நிலையங்கள் குற்றங்களுக்கு உறைவிடமாகவும், தீநெறி யில் பணங்களைக் கையாடுதற்குரிய இன்பக்களரிகளாகவும் மாறி விட்டன.

நாணயமற்றவர்களையும், திறமையற்றவர்களையும் தண்டிப் பதற்குரிய நீதிமுறையும், கவனத்துடன் கண்காணிக்கும் பொதுமக்களின் கருத்துரையும் மிகவும் இன்றியமையாதன. கலைவாணர்களும், மேதாவிகளும் செய்பவை குறித்துப் பொது மக்கள் பேசினால், அப்பெரியார்கள் பிணக்கங்கொண்டு கோபிக் கின்றனர். மேனாடுகளில் இப்படியல்ல. மேதாவிகளின் ஒழுங்குமுறைகளைப் பாதுகாத்தற்குரிய கண்ணியவிதிகள் இருந்து வருகின்றன. அத்தகைய விதிகள் இந்திய நாட்டில் மெள்ளமெள்ள வேரூன்றி வளர நெடுங்காலம் செல்லும்; என்றாலும் அவற்றைப் பேணி வளர்த்தல் மிகவும் வேண்டத் தகும் கருமமாகும்.

நுண்பொருள்களை வெளியிட்டுவரும் மதிப்பு வாய்ந்த தாள்களில் கலைத்துறையில் தலைசிறந்த அறிவாளிகள் தமது ஆராய்ச்சி முடிபுகளை, அவ்வப்போது வெளியிட்டுவரவேண்டும். அறிவாளிகள் வெளியிடும் ஆய்வுரைகள் தம்மை ஒப்பாரும் மிக்காரும் ஆகிய பேராசிரியர்கள் ஆய்ந்து தெளிவிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அறிவுநூற்றாள்கள் நடுநிலைநின்று, நேரிய முறையிலும் துணிபுடனும் உண்மைகாணுமெனின் அறிவாளிகளின் ஆதரவையும் நன்மதிப்பையும் பெறுவன வாகும்.

கல்வித்திறனுடையார் உண்மைகாண்பதில் வேட்கை மிகுந்தும், கல்விவளர்ச்சியில் ஆர்வம் பெருகியும் இருக்க வேண்டுமெனும் அவசியத்தைக் காளிதாசர் நன்குவிளக்கி யுள்ளார் :—

'ஒரு கலைவாணர் அல்லது புலவர், சிறந்த புகழையும், ஊதியத்தையும் பெறக்கூடிய உன்னத நிலையை எய்திய காரணத்தால், தம்மை ஒத்த அறிஞர்கள் கூறும் குறைபாடுகளைக் கருதாமலும், பட்டிமண்டபமேறிச் சொல்லேருழவர்களுடன் வாதம் புரியாமலும் வாளா இருப்பரேல், தமது கல்வியை வயிறு வளர்த்தற்குரிய கருவியாக இழிவுபடுத்தினவர் ஆவர் என்றும், கல்விவிலைவணிகரே அன்றிப் புலவரல்லரென்றும் கருதப் படுவர்.

பண்டைக்காலத்தே அரங்கமேறிச் சொற்போர் புரிவதே கற்றறிந்தாரின் மேதகவைக் காட்டுவதாயிருந்தது. இற்றைநாளில் நூலியற்றல், ஆய்வுரைவரைதல், சொற்பொழிவாற்றல் ஆய பலவகைகளில், புலமையும், ஆய்வுத்திறனும் புலமையைக் காட்டுங் கருவிகளாயிருந்து கல்விமான்கள் கல்லாததுலகளவு எனமதித்து மேன்மேலும் கல்வியில் கருத்தூன்றும்படி ஊக்குகின்றன.

கலைஅறநிலையங்களின் காவலர், அரசியலார் ஆகியவர்கள் சமூகம், துரைத்தனம், சமயம் முதலியவற்றைக் குறித்துக் கல்விமான்கள் கூறும் கருத்துக்களில் தலையிடாது தனிஉரிமை தருதல் மிகவும் அவசியம். ஆராய்ச்சி, சோதனை, கல்வி வளர்ச்சி, உண்மை விளக்கம் இவற்றிற்கு எவ்விதமான தடையும் கட்டுப்பாடும் கூடாது. இதனால் கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் விதிகளுக்கும் சோதனைக்கும் அகப்படலாகாதென்பது கருத்தல்ல. அது உரிமை ஆகமாட்டாது; பொறுப்பற்ற தன்மை ஆகும்.

ஊதியம்பெறும் ஆசிரியரின் உரிமை ஒருவகையில் குறைக்கப்படுகின்றது; அது கண்டிக்கத் தக்கதாகும். சிலசமயம் குடிமகனுக்கு இருந்துவரும் உரிமையைக்கூட ஆசிரியர் விட்டுக் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வுரிமை ஆட்சியில் வந்தால் அதிகாரி நிலையிலிருப்பவர்க்கு இடர்ப்பாடு நேருமென எண்ணி இத்தகையவரம்பு ஏற்படுத்தப்படுகின்றது.

அரசியற் குழப்பங்கள் மிக்கிருக்கும் காலங்களில் இத்தகைய கட்டுப்பாடுகள் வேண்டியிருக்கலாம்.

இளைஞர்களை நேர்மையானவழியில் நடத்தித் துணிபுடைய குடிமக்களாக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் ஆசிரியர்களை அவற்றைச் செய்யாதவாறு கட்டுப்படுத்துவது முறையல்ல. அரசியலாரின் பணியாளனாக இல்லாத ஒரு ஆசிரியர், குடிமக்கள் எத்தகையராய் இருக்கவேண்டுமென்பதற்குத் தாமே எடுத்துக் காட்டாய்த் திகழவேண்டுமல்லவா? ஒரு மனிதன் தனது நடக்கையால் தகுதி வாய்ந்தவன் என மதிக்கப்படுமாறு ஒழுகுவது, அவனுடைய உரிமையெனக் கருதப்படுவதினும் கடமையென்றே கருதப்படவேண்டும்.

என்னை எவ்வாறு நினைத்தாலும், நினைத்துக்கொள்ளட்டும்; தேர்வுபற்றிய காரியங்களில் ஆசிரியத்தொழிலில் இருப்பவர்கள் மிகமிக உயர்ந்த நடை உடையராய் விளங்கவேண்டும். நமது நாட்டில் நடைபெற்றுவரும் எல்லாவகையான தேர்வுகளிலிருந்தும் பழிக்கிடமான செயல்கள் அகற்றப்படவேண்டும். அரசியல் ஏற்றத்தை நாடும் செயல்கள் ஒழுக்கத்தின் இழிதகவை வருவிக்கின்றன. கல்வியில் உயர்ந்த வாக்காளர்களும், தேர்வாளிகளும் தேர்வுமுறைகள் எவ்வாறு நடைபெறவேண்டுமெனக் காட்டுவார்போல் நடந்துகொள்ளவேண்டும். பல்கலைக் கழகங்களின் தேர்வுகளில் சோதனைபெற்றும், குடிமக்களின் உரிமைகளை நன்கு அறிந்தும், இருக்கிறமேதாவிகள் இழிசெயல், கைக்கூலி, அச்சுறுத்தல், இச்சகம்பேசல், மனிதரின் தாழ்ந்த தன்மையைநாடுதல் ஆதிய கீழ்த்தரமான செயல்களுக்கு ஆளாகாமல் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டாமா?

பல்கலைக் கழகத்தினர் இற்றைநாளில் மிகமிகச் சடுதியில் தெளிவடையவேண்டிய மற்றொரு காரியம் இருக்கிறது. அதாவது அறிவுநூற் பொருள்களை எந்தமொழியின் வாயிலாகக் கற்க வேண்டுமென்பது. தலைமுறையாகக் கையாளப்பட்டு வந்த முறை இதுபோது ஆராய்ச்சிக்குரியதொன்றாக ஆகிவிட்டது.

அங்கிலமொழியின் வாயிலாய்ப் பள்ளியிறுதி, பல்கலைக் கழகப் படிப்புகளில் அறிவுநூற்களைக் கற்பதென்பது அருவருப்பையும் சீற்றத்தையும் விளைத்திருக்கின்றது. காரண காரிய முறையால் இதனை ஆராயலாகாது. மனவுணர்ச்சியே இக்கருமத்தில் முனைத்து நிற்கின்றது; மொழிப்பற்றைத் தடுக்க முடிவதில்லை. கலைத்திறங்கட்கு ஊறு நேராத வண்ணம் மாறுதல்களைச் செய்து முடிப்பதே சால்புடையதாகும்.

ஒரு தலைமுறையாகவே இக்கல்விச் சீர்திருத்தம் அவசியமெனக் கருதப்பட்டு வருகின்றது. ஆனால் அரசியலார் நேற்றுவரை இதனை ஒப்புக்கொள்ளாமலோ அசட்டை செய்தோ வந்தனர். தாங்கள் விரும்பினாலும், விரும்புமளவும் இதனைச் சோதனையாக உயர்தரக் கலாசாலைகளில் நடத்திப் பார்க்கலாமென அநுமதிக்கப்பட்டிருந்தது. அறிவுநூற் பொருள்களைக் கூறுதற்கான குறியீட்டுச் சொற்களை ஆக்கிக் கொள்ளுதற்கு ஏற்றவழி துறைகளை நாடவுமில்லை, செய்து கொள்ளவுமில்லை. சீர்திருத்தக்காரரும், தாய்மொழி வாதிகளும் விவாதத்தில் மண்டையை உடைத்துக் கொள்ளுகின்றனர். எண்ணித்துணிந்த திட்டமில்லாத குறைபாடு கண்கூடாக விளங்குகின்றது. நல்ல பாடநூல்கள் கிடைப்பது அரிதாயிருக்கின்றது.

பள்ளியிறுதிப்படிப்பின் நிலை இவ்வாறான குழப்பத்திலிருக்க, வார்தா கல்வித்திட்டம் தலைநீட்டுகிறது. பல்கலைக் கழகத்தில் நுழைவதற்கு முந்திய படிப்பிலிருந்து ஆங்கில மொழிப்பயிற்சி அகற்றப்படவேண்டுமென்பது கருத்து. இதனால் பள்ளியிறுதிப்படிப்பிற்கும், கல்லூரிப்படிப்பிற்கும் நடுவில் பெருத்த இடைவெளி ஏற்படுமெனக் கருதவேண்டியிருக்கின்றது. சில வாரங்கட்கு முன்னர்தான் அறிவு நூற் கலைகளைத் தாய்மொழியிலே பயிற்றவேண்டுமெனச் சென்னை அரசியலார் கட்டளையிட்டிருக்கின்றனர். இம்மாறுதலால் நிகழக்கூடிய இடர்ப்பாடு பெரிதாகவிருக்கும். நெடுங்காலமாய் இத்திருத்தம் கருத்திலிருந்தாலும், போதியபடி ஆயத்தம் செய்யப்பெறவில்லை.

இந்நிலையில் பொறுமையும், நிதானப்போக்கும் இன்றியமையாது வேண்டப்படும். ஒவ்வொரு மொழிக்குரிய எல்லைக்குள் வழங்குதற்கான குறியீட்டுச்சொற்களை ஆக்கவும்அவற்றை அனைவரும் ஏற்கவும் செய்யவேண்டும். தொடக்கத்தில் குறைபாடுகள் இருப்பதால் கெடுதலில்லை. இந்த முற்கோப்புவேலை முடியாதவரை கலைக்கழகப்படிப்பில் சீர்திருத்தத்தை நிறைவேற்றமுடியாது. பள்ளியிறுதி தேறிய மாணவர் தாய்மொழிப் பயிற்சியிலிருந்து திடுமென ஆங்கிலத்தில் பாய்வது எங்ஙனம்?

உயர்தரப்படிப்பில் இத்தகைய சீர்திருத்தத்தை முதலில் கையாளப் புகுந்தவர்கள் வடநாட்டில் தோன்றியிருக்கும் குருகுலங்களும், பூனா பெண்கள்கலைக்கழகமும், உசுமேனியர் கலைக்கழகமும் ஆகும். இம்முறையைக் கையாண்டதில் சிறந்த பயன் விளைந்திருப்பதாக இவர்கள் கூறுகின்றனர். சார்பில்லாது பயனைக் கணிப்பவர் மெள்ளமெள்ளத்தான் முடிபுக்கு வர முடியும். வெற்றிகரமாய் முடிந்ததாக விரைவில் தீர்ப்பளிக்க முடியாது.

இந்தக் காரியத்தில் என் மனம் முடிபுக்கு வாராது சலித்துக் கொண்டுதானிருக்கின்றது. பல்கலைக்கழகங்களில் இந்தத் திருத்தத்தைக் கொணருமுன்னர், அரசியலாரும், பல்கலைக் கழகங்களும், கல்வித்தலைவர்களும், கலைக்கூடங்களும் உளமார ஆராய்ந்து தெளியவேண்டும். காரியமோ மிகவும் கடினமானது; மாறுதலும் அவசியம்; நீண்டகாலமாக ஆயத்தமின்றி மாறுதலைக் கையாளமுடியாதிருக்கின்றது.

# சோழமன்னரும் கோயில்களும்.

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளர்.

தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தருள் சோழரது வள்ளன்மையும், சமயப்பற்றும் இன்றும் உலகம் சிறப்புறக் கொண்டாடப்படுவனவாம். தமிழ் மூதாட்டியார் அவரைக் கூறுமிடத்து "தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே! மண்ணாவதும் சோழமண்டலமே!" என நீர், இறை, நிலம், எனும் மூன்றையும் ஒருங்கு போற்றுவாராயினர். பரணியாசிரியரும் "பல்கொடி தாழ மேருவிலுயர்ந்த செம்பியர் தனிப்புலிக்கொடி தழைக்கவே" எனப்புகழ்ந்து பாடினர். ஞாயிறுகுலத் தோன்றல்களாகிய சோழமன்னர்கள் சரித்திர காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சீரும் சிறப்புமெய்தியிருந்தமை பலசான்றுகளால் அறியக்கிடக்கின்றது. அவர்களுள் தலைசிறந்து விளங்கிய சிலர் பெயரையே பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம். அவர்தாம் ஆங்காங்கு எடுப்பித்த கற்றளிகளே, அன்னோரை நினைப்பூட்டும் வெற்றித்தூண்களாக இன்றுவரை நின்று நிலவுகின்றன. பண்டைச்சோழர்களும் அவர் பின்வந்த சரித்திரகால பல்லவ பாண்டிய சோழர்களும் பழைய கோயில்களைப் பெரிதாக்கியும், சீர்பெறப் புதுப்பித்தும், புதிய கோயில்களில் திருச்சுற்றாலயம், எழுநிலைமாடம், விமானம் முதலிய பலஉறுப்புகளுடன் எடுப்பித்தும் தங்களுடைய வலியையும் புகழையும் நிலைநாட்டினர்.

சோழர்களுள் முன்னோனாகிய முசுகுந்த சக்கிரவர்த்தி இந்திரனுக்குச் செய்த உதவியின் நன்றியாகப்பெற்ற எழு தியாகராச விடங்க மூர்த்திகள் கோயில் கொண்ட இடங்கள் சப்தவிடங்கத் தலங்களெனக் கூறப்பெறுகின்றன. அவை திருவாரூர், திருநாகைக் காரோணம், திருக்காரெயில் திருக்கோளிலி, திருமறைக்காடு (வேதாரணியம்) திருநள்ளாறு,

திருவாய்மூர் ஆகிய பதிகளிலுள்ள திருக்கோயில்களென, கந்தபுராணம், கந்தவிரதப்படலச் செய்யுட்களால் அறியலாம். அதற்கடுத்து மனுச்சோழன், கிள்ளிவளவன், கோச்செங் கண்ணன் ஆகிய இவர்கள்காலத்துச் சைவமதம் சிறப்புற் றிருந்ததென்றும் செங்கண்ணன் சோழதேசத்தில், " எண் டோளீசற்கு எழில் மாடம் எழுபது," செய்தானென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

காலப்போக்கில் சோழமன்னரின் சீரும் சிறப்பும் குன்றவே ஆறுவது நூற்றாண்டின் இறுதியில் அன்னார் பல்லவ பாண்டியர்களின் பேரரசுக்குட்பட்டவராகியும் ஆங்காங்கு சிற்றரசர்களாகவும் சேனைத்தலைவராகவுமிருந்து, பாண்டியருக் கும் பல்லவருக்கும் இடைவிடாது நடந்த போரில் மாறிமாறி இருபக்கங்களிலும் சேர்ந்து துணைபுரிந்ததாகவும் தெரிகிறது. வேள்விக்குடி செப்பேட்டிலும், வேளூர்பாளையம் பட்டயத் திலும் இவ்விடைக்காலச் சோழமன்னர்களைப்பற்றி அருகிய குறிப்புகள் காணப்படுகின்றன. 7-வது 8-வது நூற்றாண்டிலுங் கூட பொன்னிநாடெனப்படும் தஞ்சாவூர் சில்லாவிலும் அதற்கு அருகிலும் அவர்கள் வதிந்திருந்தனர், என்பது, பல்லவர், பாண்டியர், மேலைச்சாளுக்கியர், இராட்டிரகூடர் முதலியோர் கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றது. அரசியற்றுறையில் பொலிவிழந்த இக்காலத்திலுங்கூட இச்சோழர்கள் சைவ சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்தமையும் சோழஅரசன் மகளாகிய மங்கையர்க்கரசியார் பாண்டிமாதேவியாகி, அமணசமயம் மிகுந்திருந்த பாண்டிநாடு மீண்டும் சைவசமயம் நிலைபெற் றோங்கச் செய்த செய்தியும், ஆளுடைய நம்பிகள் ஆலவாய்க் கெழுந்தருளியகாலத்து ஆண்டு "தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு" இனிதமர்ந்த சோழனைப்பற்றிய செய்தியும் பிறவும் **பெரிய புராணம்** என்ற அருள் நூலில் காணப்படுவன வாம்.

பல்லவர்கள் காலந்தொட்டு இந்நாள்வரை நம் நாட்டில் கோயில்கட்டும் முறை பெரும்பான்மையும் சோழர்கள் கை

யாண்டுவந்ததே. ஆதிகாலக் கோயில்கள் சுதையாலும், செங்கல் (சுடுமண்) லாலும், (1) மரத்தாலும் கட்டப்பட்டவையாகும். அதன் பின்பு பல்லவர்கள் தலைப்பட்டு பல்லாவரம், சித்தன்னவாசல், சிங்காவரம், மகேந்திரவாடி, மாமண்டூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள குகைக் கோயில்கள்போன்று மலைகளையும், பாறைகளையும் உட்புறமாகவே குடைந்து இறைவனுக்குக் கோயில்கள் சமைத்தனரென்பது மகேந்திரவர்மனது மண்டகப்பட்டு கல்வெட்டாலும் பிறவற்றாலும் நன்குதெரிகிறது. அதற்கு அடுத்தபடியாக நரசிம்மவர்மன் காலத்து அக்குகைக் கோயில்களின் உட்புறமேயன்றி வெளிப்புறத்தினும் பாறைகளையே விமானங்கள் போன்று செதுக்கி அமைத்தமை,மாமல்லபுரம் கடற்றுறையோர மலைக்கோயில்களிலிருந்து தெரிகிறது. அவை 'எழுரதக் கோயில்க'ளென மகாபலிபுரத்தில் இன்றும் சிறப்புடன் விளங்குவது யாவரும் அறிந்ததே. பின்னர் சிவ சூடாமணி என்ற ராஜசிங்க பல்லவன் காலத்து உண்டாய காஞ்சியிலுள்ள கைலாசநாதர்கோயிலும் அவ்விடமே அவன் மகன் இரண்டாம் பரமேஸ்வரன் எடுத்த வைகுண்டப் பெருமாள்கோவில் முதலிய விண்ணகரங்களும் ஆகிய இவை கல்லாலும் சாந்தாலும் ஆக்கப் பெற்றவை. இதற்கடுத்தபடியாக எடுக்கப்பட்ட கோயில்கள் பெருங்கற்களை இசை தெரியாமல் அடுக்கி எழுப்பியனவாகும். இத்தகைய கோயில்கள் முதற்படியாக இறைவன்கோயிலும் முன்மண்டபமுமாகவே அமைந்து பின்பு தனிப்பட்ட சுற்றுலைகளும் ஏற்படுத்தப்பட்டன. இவைகளின் காலம் ஏழுமுதல் ஒன்பதாவது நூற்றாண்டாகும். இக்காலத்தனவும் இதற்குமுற்பட்டனவுமானகோயில்கள் பலதிறப்பட்டனவாக அப்பர் தேவாரத்தில் காணப்படுகின்றன.

---

(1) Ins. 51 of 1914.

செங்கல்லால் கட்டப்பெற்ற திருவைகாவூர் மகாதேவன் கோயிலை கற்களால் கட்டுவதற்கும் ஏற்கனவே உள்ள தேவதான நிலங்கள் போதாமையிற் கோயிலின் செலவுக்கேற்ப மற்றும் நிலதானம் கொடுத்ததுவும் குலோத்துங்கன் I காலத்து கல்வெட்டு அறிவிப்பது காண்க.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்சேரும் பெருங்கோயிலெழு
[பதிஞேடெட்டும் மற்றுங்,
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில் கருப்பறியல் பொருப்பனைய
[கொகுடிக்கோயில்,
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும் இளங்கோயில் மணிக்கோயில்
[ஆலக்கோயில்,
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து தாழ்ந் திறைஞ்சத்
[தீவினைகள் தீரும்அன்றே"
(அப்பர்—அடைவு திருத்தாண்டகம். 5.)

இவைகளின் சிறப்பியல்புகள் தெளிவாகக் காணக் கிடையாவிடினும் இவைகளின் தன்மைகள் ஆராய்தற்குரியனவாகும். இதற்கடுத்து சோழர் ஆதிக்கத்தில் கட்டியவைகளின் கருப்பகிருகத்தின்மேல் உயர்ந்து விளங்கும் விமானங்கள் கட்டப்பட்டும், அச்சுவர்கள்மீது பல அரிய சிவமுகூர்த்தங்கள் செதுக்கப்பட்டும், அதன்மீதும் அடிப்பாகங்களிலும் கல்வெட்டுக்கள் எக்காலமும் எளிதாய்ப் புலப்படும் தெளிவுடன் பொறிக்கப்பட்டும் உள்ளன. காலஞ்செல்லச் செல்லத் தனிப்பட்ட கோயில்கள் இறைவிக்கும், சுப்பரமணியர், கணபதி, நடராசர் முதலியவர்களுக்கும் இச்சுற்றுலேகளில் ஏற்படுவனவாயின.

ஒன்பதாவது நூற்றுண்டின் இடையில் சோழர் ஆதிக்கத்தை மீண்டுந் தலையெடுக்கச்செய்தவன் **விசயாலயன்** ஆவான். இவனே சரித்திரகாலச் சோழர்களின் பேரரசுக்கு அடிகோலினவன். செந்தலைக் கல்வெட்டால் (1) முத்தரையர் என்ற குறுநிலமன்னர், தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் இடைப்பட்ட ஒரு சிறு நிலப்பரப்பைக் காத்துவந்த செய்தி புலனாகின்றது. இச்சமயத்தில் சோழமரபினர் தஞ்சைசில்லாவின் மற்றொருபால் பழையாறையைத் தலைநகராகக்கொண்டு பல்லவரின்கீழ் அரசு செலுத்தியிருக்கையில், தஞ்சையை அப்போது ஆண்டுவந்த பெரும்பிடுகு முத்தரையனைவென்று கைப்பற்றிய வரலாறு திருவாலங்காடு (2) செப்பேட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

---

(1) S. I. I. III p. 415.
(2) Epi. Ind. xiii p p 134—148; XV p 49; கள்ளர் சரித்திரம். p 23.

இவ்வாறு தஞ்சாவூரில் சோழ அரசை நிலைநாட்டிய விசயாலயன் அங்கு துர்க்கைக்கு நிசும்பாசூதனி என்ற பெயரால் கோயில் சமைத்தான். அஃது இஃதெனக் குறிப்பிட முடியாதிருப்பினும் தற்போதைய தஞ்சை விண்ணாற்றங்கரைப் பாதையில் உள்ள கோடியம்மன் கோயிலாகவோ, தஞ்சைக் கீழ வாயில் கோட்டத்துப் பூமாலை ராவுத்தன் கோயில் அணித்தாயுள்ள காளியம்மன் கோயிலாகவோ அமையலாம். இஃதன்றி, புதுக்கோட்டையிலுள்ள நார்த்தாமலை என்ற நகரத்தின் தென்மேற்குக்குன்றின் மேலுள்ள விஜயாலய சோளீச்வரம் (1) என்ற ஒரு அழகிய கற்றளி இருக்கின்றது. அதனையும் இவன் எடுத்திருக்கவேண்டும்.

விசயாலனுக்குப்பின் அவன் மகன் இராசகேசரிவர்மனை முதலாம் ஆதித்தன் இருபத்தெட்டியாண்டுகள் ஆணை செலுத்தினன். "தொண்டைநாடு பரவின சோழன்" எனத் தில்லைத்தானம் கல்வெட்டு ஒன்று இவனைச் சிறப்பித்திருக்கின்றது. இவன் கல்வெட்டுக்கள் வடக்கே திருக்கோவலூர், காஞ்சி, உக்கல் முதலிய இடங்களிலும், தெற்கே திருக்கோகரணம், குற்றாலம், சுசீந்தரம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களின் மீதும் பொறிக்கப்பட்டுள்ளன. தக்கோலம், திருக்கழுக்குன்றம் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளால் இவன் காலத்துத் தொண்டைமண்டலம் முழுதும் இவன் ஆணைக்குள் அடங்கியிருந்ததென்பது புலனும். இவன் எடுத்தபல கற்றளிகளில் திருவெறும்பியூர்க் கோயிலும், பண்டாரவாடை ரயில்' தலத்திற்குஅணித்தான திருச்சேயலூர் என்ற தேவராயன் பேட்டைக் கோயிலுமாகும். (2) ஆதித்தசோழன் இறந்த இடம் திருக்காளத்திக்கு அண்மையிலுள்ள தொண்டமானூற்றூர் என்னும் தொண்டமநாடு என்பதாம். அச்சிற்றூரிலுள்ள கோதண்ட ராமேசுவரர் என்பதாகிய ஆதித்திய ஈஸ்வரர்

---

(1) No. 282 of Pudukkottai inscriptions

(2) Arch. Rep. 1924

கோயில் அச்சோழன் நினைவாகவோ, அவர் சமாதைக் குறிக்கவோ எழுப்பிய பள்ளிப்படை எனத் திருமால்புரம் (1) கல்வெட்டால் தெரிகிறது. பெரியவர் அடங்கிய இடத்திலும் அவர்களை நினைவுகூர்தற்கென எடுக்கும் கோயில் பள்ளிப்படை என்ற பெயருடையதென்பது சோழபுரம் கல்வெட்டாலும் தெரிகிறது.

ஆதித்தன் மகன் **முதற்பராந்தகன்** சிவபத்தன். தில்லை நடராசருக்குச் சிற்றம்பலத்தைக்கட்டி அதனைக் கனக சபையாக ஆக்கப் பொன் ஒடு வேய்ந்தான். அரியபல நிபந்தங்களை ஏற்படுத்தியும் வழிபட்டான். இவன் கட்டிய கோயில்கள், காட்டுமன்னார்குடிக்கடுத்த உடையார் கோயில், முசிரித் தாலுகா சீனிவாசநல்லூர் குரங்கனதர் கோயில், தில்லைக் கடுத்த எரும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் (Ep. 69. 1914 P94) முதலியனவாம்.

பராந்தகன் மகன் **கண்டராதித்தன்** காலத்தில் சிவன் கோயில்கட்டும் வழக்கம் பெருகிற்று. இக்கண்டராதித்தன் சிவபத்தனுக விளங்கினன். இவன் மனைவி உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவி தன் பத்திவிளங்க எடுப்பித்த கற்றளிகளும் அவற்றிற்கு அமைத்த நிபந்தங்களும் மிகப்பலவாகும். இவ்வம்மையாரது நீண்ட சைவ வாழ்க்கையே, பின்தோன்றிய சோழமன்னர்கள் பெருங்கோயில்களைக் கட்டுவதற்கு ஊக்கம் அளித்ததெனக்கருதவும் இடமுண்டு. இவர் நினைவுக்குறியாக நாகைக்கடுத்த ஒருசிற்றூரில்செம்பியன்மாதேவி என்றகோயிலை முதலாம் இராசராசனும் அவன் அக்கை குந்தவையும் எடுப்பித்தார்களென அறிகிறோம். கண்டராதித்தனது படிமத்தைக் கோனேரிராசபுரத்துக்கோயிலுட்காணலாம். கண்டராதித்தன் தம்பி

(1) Epi. Ind. VII p. 193; No. 286 of 1906

விருத்தாசலத்து ஸ்தாபன மண்டபம், கோபுரம், திருச்சுற்று மாளிகைகள், பரிவாராலயங்கள் யாவும், இவ்வம்மையாரால் கட்டியவை; இவையன்றி மிகப்பல நிபந்தங்களையும் செய்துள்ளார். மற்றும் வடகுரங்காடுதுறை ஆபத்சகாயர் கோயிலும் திருவாரூருக்கு அணித்தாயுள்ள திருவானேரி கோயிலும்.

அரிஞ்சயன் மகன் இரண்டாம் பராந்தகனான சுந்தரச்சோழனும் அவன் பட்டத்தரசி வானவன் மாதேவியாரும் சிவபத்தர்கள். இவன் தனது வாழ்க்கையிலேயே முடிதுறந்து இறுதி நாட்களைப் பொன் மாளிகை எனப்பட்ட காஞ்சியில் கழித்தான். இவன் இறந்தபோது இவனது மனைவியார் உடன்கட்டை ஏறினர். இதனைத் திருவாலங்காட்டுச் சாசனத்துக் காண்க. இவ்விருவர் படிமங்களையும் இவர்தம் மகளார் குந்தவையார் (முதலாம் இராச ராசனின் அக்கை) தஞ்சை இராசராசேச்சுரத்தில் எழுந்தருளு வித்து நிபந்தங்கள் கொடுத்துள்ளதைக் கல்வெட்டுகளில் (1) காணலாம். "பழையாறை நகர்ச்சுந்தரச்சோழரை யாவரொப் பார்களித் தொன்னிலத்தே" என்ற பழந்தமிழ்ச் செய்யுள் இச் சோழனைப் புகழ்ந்திருப்பது தெரியலாகும். இவனது ஆட்சி யின் ஐந்தாம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று திருவிசலூர் சிவயோகநாதசுவாமி கோயிலில் உள்ளது. இக் கோயிலின் உள்கோபுரமும், திருச்சுற்றாலயமும இராஜேந்திரச் சோழன் (3) (12-ம் நூற்றாண்டு) காலத்துக் கட்டப்பட்டதென் பது மற்றொரு கல்வெட்டால் (2) தெரிகிறது. ஆகவே இக் கோயிலானது சுந்தரச்சோழனால் ஆரம்பிக்கப்பெற்று நாளடை வில் மற்ற சோழர்களால் பெரிதாக அமைக்கப்பட்டதென்பது புலனாம். இம்மாதிரியாகவே, கோயில்கள் நாளடைவில்வளர்ச்சி பெற்றமை கல்வெட்டாராய்ச்சியால் அறியலாம்.

---

Epi. Rep. 1914 P. 21 திருமான்சேரி கோயிலது பல நிபந்தங்கள்

(1) 287 of 1917, 47 of 1918

(3) Ep. Rep 1904 p. 36.

(2) 357 of 07

உ

தமிழ்த்தாய் வாழ்க.

# "இளங்கோவும், இறைமகனும்."

(திரு. K. கோவிந்தன், தமிழ்மாணவன், ஔவைத்தமிழகம் திருவத்திபுரம்)

"சேரன் செங்குட்டுவன்" நூலாசிரியர், உயர்திரு. மு. இராகவையங்காரவர்கள், தமது நூலின் 5-ஆம் அதிகாரமாகிய, செங்குட்டுவனது வடநாட்டியாத்திரையின், இரண்டாம் அங்கமாகிய, காட்சிக்காதையின், முதற்பத்தியின், இரண்டாவது அடிக்குறிப்பில்," 'இளங்கோ வேண்மாளுடனிருந்தருளி' எனவரும் மூலத்துக்கு அரும்பத உரையாசிரியர், 'இளங்கோ வேண்மாள் என்பது பெயர்; நன்னன் வேண்மாள், உதியன் வேண்மாள் என்பதுபோல; வேண்மாளுடனிருந்து இளங் கோவை அருளிப் பாடிட்டு என்றுமாம்' என்றெழுதினர். இதனால், தம்பி இளங்கோவடிகளுடனும், மனைவி வேண்மாளுடனும் செங்குட்டுவன் இருந்தான் என்று அத்தொடருக்கு உரை கூறுவதும் அவ்வுரையாசிரியர் கருத்தாதல் விளங்கும். இளங்கோவடிகள் தம் தமையனுடன் தங்கியிருந்தவரென்பது, பதிகத்தாலும் தெரியவருதலாற் பிற்கூறியதும் பொருந்துவதே யாம்" என்று எழுதியுள்ளார்கள்.

இவர்தம் கூற்றினால், "இளங்கோவேண்மாள் உடனிருந்தருளி" என்ற அடிக்கு, இளங்கோவும், வேண்மாளும், இறைமகனும் ஒருங்கிருந்தனர் என்பது பொருளாகும் என்பதும், அடிகள், குறவர், குன்றத்து நிகழ்ந்தன குட்டுவற்குக் கூறுழி, தாமும் அவனுடன் இருந்ததாகக் காட்சிக் காதையினும், பதிகத்தினும் கூறியுள்ளார் என்பதும், அரும்பத உரையாசிரியர்க்கும் அதுவே கருத்து என்பதும் இவர் உட்கோளாதல் பெற்றும்.

அடிகள், அரசு துறந்திருந்த குணவாயிற் கோட்டம், திருக்குணவாயில், குணவாசல் எனப் பெயர் பெற்று, வஞ்சி நகரின் கீழ்த்திசைக்கண்ணுள்ளதொரு ஊரில் உள்ள அருகன் கோயிலாம் ஆதலானும், இலவந்திகைச் சோலையென்பது வஞ்சிநகர்க்கு அண்மையில் உள்ளதும், அரசனும், உரிமையும் ஆடுவதுமாய காவற்சோலையாம் ஆதலானும், அரசு துறந்து, குணவாயில் கோட்டத்து இருப்பவர் அரசனும், உரிமையும் ஆடும் காவற் சோலையில் அவருடன் இருந்தார் என்றல் நிரம் பாதாகலானும், மனைவியுடன் மலைவளம் காணச் செல்லும் தன் உடன்பிறந்தானுடன் அரசமுனியாகிய அடிகள் சென்றார் என்றல் அடிகட்கே இழுக்குடைத்தாம் ஆதலானும், மணலெக் கரில் மூவரும் இயைந்து ஒருங்கிருந்தனர் என்றல் இளங்கோ வேண்மாள்தனக்கு இழிவுடைத்தாம் ஆதலானும், கையுறை முதலியன கொணர்ந்த வேடுவர் முதன் முதலில் அரச முனியை வணங்கிய பின்னரே அரசனை வணங்குதல் நியதி யாக, அங்ஙனமின்றி, அரசனை வணங்கினர் என்றல் நியதி யன்றுமாதலாலும், கோப்பெருந்தேவி, கண்ணகி யென்ற இரு வருள் சிறந்தார் யார் என்ற ஐயத்தை அஃகியகன்ற அறி வுடைய அரசமுனி தன்னுடன் இருப்பவும் அவரிடம் கேட்டுத் தெரியாது தன் மனைவியிடம் கூறல் அழகன்று மாதலானும், அவ்வடிக்கு அவ்வாறு பிரித்துப் பொருள்கூறல் பொருளாகாது என்க. மற்றவ்வடிக்குப் பொருள் என்னை எனின்; கூறுதும். இளங்கோவேண்மாள் என்ற தன் மனைவியுடன் இருந்து என் பதே பொருள் என்க. இருக்குவேள், இருங்கோவேள், இளங் கோவேள், நன்னன்வேள், உதியன்வேள் என வேளிர்கள் பல ருள்ளும், இவள், இளங்கோவேள்குலத் துதித்தாள் என்றற்கு இளங்கோவேண்மாள் என்றார் என்க.

அடியார்க்கு நல்லார், பதிகத்தில், மூன்று இடங்களில், அடிகள் அரசனுடன் இருந்தார் என்பதை நிலைநாட்டுதற் பொருட்டு வலிந்து பொருள் கூறியுள்ளார்கள். அவை வருமாறு:—

1 " அவனுழையிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறி குவனது பட்டதென் றுரைப்போன்."
(பதிக. 10—11.)

(அடியார்க்கு நல்லார் உரை)—குறவர் இளங்கோவடிகளை நோக்கி, அறிந்தருள் என்ற அளவிலே, செங்குட்டுவன் அதிசயித்து முகம்நோக்கப் பரிசில் காரணமாக வந்து அவனுழையிருந்த சாத்தன் அதனைக் குறிப்பானறிந்து அது விளைந்தவெல்லாம் யானறிகுவனென் றுரைக்கின்றவனென்க, என்றவாறு.

2 " வினைவிளை காலம் என்றீ ரியாதவர்
வினைவிளை வென்ன விறலோய் கேட்டி."
(பதிகம். 37—38.)

(இதன்பொருள்)—நீர் முன்னே வினைவிளை காலமென்று சொல்லிப் போந்தீர், அவர்க்கு வினைவிளைந்தகாலம் என்னையென்று அரசன் வினவவென்க, என்றவாறு.

3 " அரசியல் பிழைத்தோர்க்கு..................
பாட்டுடைச் செய்யுள்." (பதிகம். 55—60.)

என்பதன் அவதாரிகையில், " அங்ஙனம் அரசனோடு சாத்தனார் கூறக்கேட்டஅடிகள் பொருட்பகுதியை மூவகையுள்ளுறையாக வகுத்துக் கூறுவார் " என்பது.

குறவர்கள் குன்றத்து நிகழ்ந்தனவற்றை அடிகளுக்கே கூறினார் என்பதை விளக்குதற்பொருட்டே, " இளங்கோ அடிகட்கு" (பதிகம். 2.) என நான்காம் வேற்றுமை உருபு விரியக் கூறியுள்ளாராதலானும், "செங்குட்டுவன் அதிசயித்து முகநோக்கப் பரிசில்காரணமாக வந்து அவனுழையிருந்த சாத்தன்" என்ற சொற்றொடரை, மூலப்பகுதியில் இல்லாதிருப்பவும், அடியார்க்கு நல்லார் தாமே கொண்டு கூட்டியுள்ளாராதலானும், அவனுழை என்பதற்கு, அடிகளுழை என்பதே பொருளாமாதலானும், அடிகள் விருப்பு வெறுப்பற்ற ஒருவராதலின், தன்னையும் பிறரைக் கூறுமாறு போன்றே " அடிகட்கு " என்றும், "அவனுழை" என்றும் விளித்துள்ளாராதலானும், " வினைவிளை

காலம் என்றீர்.......விறலோய் கேட்டி" (37—38) என்புழியும், "அவர்க்கு வினைவிளை காலம் என்னையென்று அரசன் வினவ வென்க" என்று, மூலப்பகுதியில் இல்லாத அரசன் என்பத னைத் தாமே கொண்டு கூட்டியுள்ளாராதலானும், இம்மூன்று இடங்களினும், அடியார்க்கு நல்லார் கூறியாங்கு, அரும்பத உரையாசிரியர் கூறாது, வினை முடிபு கூறுங்கால், "...........குண வாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங் கோஅடிகளுக்குக் கண்ணகி வானவர் போற்றத் தன் கணவ னோடு கூடியது கண்டு, செங்குட்டுவனுக் குரைத்த குறவர் வந்து, "எல்லா மறிந்தோய்! இதனை அறிந்தருள்" என்று கூறிப்போக பின்பு செங்குட்டுவனைக்கண்டு, போந்து அடிகளுழைவந்த சாத்தன் அதுபட்டவாறெல்லாம் கூற........" என்று அரசனுழை, அடிகள் இருந்தாரல்லர் என்பதை விளக்கமாகவே கூறியுள்ளாராதலா னும் அடியார்க்குநல்லார் தாமும், வினைமுடிபு கூறுங்கால், அடிகள் அரசனுழை இருந்தாரல்லர் என்பதை வற்புறுத்தும் நெறியில் கூறியுள்ளாராதலானும், குறவர் குன்றத்து நிகழ்ந் தன குட்டுவற்குக் கூறுழி அடிகள் அரசனுடன் இருந்தார் என்பது பதிகத்தானும் விளங்குகின்றது என்பது பொருளில் கூற்றாதல் அறிக.

அவ்வாறே, காட்சிக்காதையினும் கூறியுள்ளார் என்பதும் குற்றமாம் என்க.

அவ்வாறாயின், குன்றத்து நிகழ்ந்தவற்றைக் குறவரும், சாத்தனாரும் அரசனுக்குக் கூறினர் எனக்காட்சிக்காதையானும், அடிகட்குக் கூறினர் என பதிகத்தானும், பெறப்படுதல் மாறு கோளாம் எனின், அஃறியாது கூறினாய்; என்னை? மலைவளம் காணச்சென்ற அரசன்பால், ஆண்டைய நிகழ்ச்சிகளைக் குறவர் கூற அவன்கேட்டு, வியப்பெய்தியது அறிந்த அவனுழையிருந்த சாத்தன், அவற்கு முன்னைய வரலாற்றினை விளங்கக்கூறி, அவ் வரலாற்றினை யொருகாப்பியமாகச் செய்யின், பெரும்பயனுடைய தாகும் எனக்கருதி, அது செய்தற்குரியார், அரசமுனியும், பெரும்புலவரும் ஆய அடிகளே யென்பதை யுணர்ந்து, கண்ணகி

வானுடைடைந்ததைக் குறவர் கூறக்கேட்ட தான் கூறுதலினும், கண்ட அக்குறவரே கூறல் சிறப்புடைத்தாம் ஆதலின், அவரை யும் உடன்கொண்டு, அடிகள்பாற் சென்று கூறினர் எனக்கொள் ளின் மாறுபடுமாறு யாண்டையதென்க.

இதுகாறும் கூறியவாற்ருன், "இளங்கோவேண்மாளுட னிருந்தருளி" என்ற அடிக்குக் கூறப்படும் இரண்டாவதுரை குற்றமுடைத்தாம் என்பதும், அடிகள், அரசனுழை இருந்தார் என்பது பதிகத்தானும் பெறப்படுகின்றது என்பது பொருளில் கூற்ருமென்பதும், அடியார்க்கு நல்லார் கூற்றை ஆதாரமாகக் கொண்டு, திரு. மு. இராகவையங்கார் அவர்கள் "பிற் கூறிய தும் பொருந்துவதேயாம்" என்றல் வழுவுடைத்தாம் என்பதும் பெறப்பட்டவாறு அறிக. ஆன்றோர் உண்மை துணிவார்களாக.

# தமிழ்ச் செய்திகள்.

**கரந்தைத் தமிழ்ச் சங்கம் :—**

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு உறுப் பினர் ஒருவர் தேர்ந்தனுப்புமாறு கழகப் பதிவாளர் வேண்டி னர். தேர்விற்குரிய விதிகளின்படி திரு. நீ. கந்தசாமிபிள்ளை அவர்கள் M. R. A. S. 26—7—38உயில் தேர்ந்தனுப்பப் பெற்றனர்.

**சென்னைப் பல்கலைக் கழகம் :**—16—7—38உ தமிழ் மொழிக்குழுமம் கூடி பாடபுத்தகங்களைத் திட்டம் செய்தது; தேர்வு ஆசிரியர்களைத் தேர்ந்தது; சென்ற ஆண்டுத்தேர்வின் வினத்தாள்களிற்கண்ட குறைபாடுகளைக் குறித்தது; ஆராய்ச் சிக்குத் தகுதியுள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்தது.

கல்லூரியிற் பயிலாது தமிழ் வித்துவான் தேர்விற்குச் செல்லும் மாணவர்கள் 25 வயதிற்குக் குறையலாகாதெனும் விதி, முறையற்றதாகவும், தேர்வுபெறும் மாணவர்கட்குத் தீமை புரிவதாகவும் இருக்கிறது. ஆதலால் வயதின் எல்லையைக் குறைக்கவேண்டுமெனக் கருதி 22 வயதாக அமைக்க வேண்டுமென முடிவு செய்யப் பெற்றது. கழகத்தின் ஆட்சிக் குழுவினர் (Syndicate) இதனை ஏற்றுக்கொள்ளுவரென எதிர் பார்க்கப்படுகின்றது.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம் :—**

17—7—38உயன்று தமிழ்மொழிக் குழுமம் கூடியது. திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் விடுதிபெற்றிருத்தலால் அப்பேராசிரியர் பதவியிலிருந்துவரும் திரு. பண்டிதமணி. மு. கதிரேசன்செட்டியார் அவர்களின் தலைமையில், பொருள்கள் கருதி முடிக்கப்பெற்றன.

---

**ஒருமைக்—கல்வி** (Co-Education): 27—7—38 தேதி குண்டூரில், ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திருவாளர், Dr. C. R. இரட்டி அவர்கள் நிகழ்த்திய உரையின் சுருக்கம் :—

இதுபோது பள்ளியிறுதித் (S. S. L. C.) தேர்வில் வெற்றியுறும் மாணவிகளிற் பெரும்பாலர் சென்னையிலுள்ள பெண்கள் கல்லூரிகளிற் சேருகின்றனர்; சிலர் ஆந்திரநாட்டுக் கல்லூரிகளிலும் சேருகின்றனர். ஆனால் ஆந்திர நாட்டிலோ ஆண்களுடன் இருந்து கல்வி பயிலவேண்டியிருக்கின்றது; இது பெரும்பாலர்க்குப் பிடித்தமில்லை. நமது பெண்கள் நடுத்தேர்வு (Intermediate) காலத்திலாகிலும் பெண்கள் கல்லூரிகளிற் சேர்ந்து, தமது சமூக முன்னேற்றத்திற்கான துறைகளை நாடி அமைப்பதற்குப் போதிய வசதிகளைத் தருவது அவசியம்.

உலகத்தின் பல பகுதிகளிலுமுள்ள அயல்நாடுகளில் **ஒருமைக்—கல்வி** நடந்துவரும் முறைகளை, மற்ற கலைவாணர்கள் எவ்வளவு தெரிந்துவைத்திருக்கின்றனரோ அதற்குக் குறையாமல் யானும் தெரிந்திருக்கின்றேன். நடுத்தேர்வின் பருவத்தில் தனித்த பெண்கள்கல்லூரிகளிற் பயிலும் மாணவிகள் ஒருமைக்—கல்வி பயிலும் மாணவிகளைக் காட்டிலும் பெண்மை நலங்களைச் சிறந்த முறையில் வளர்ப்பதைக் கண்கூடாகத் தெரிந்து இருக்கின்றேன்.

ஆடவரும், பெண்டிரும் ஒருங்கே இருந்தும்; உழைத்தும் காலங்கழிக்க வேண்டியிருத்தலால், வயதையும், உறுதிப்பாடுகளின் திறத்தையும் கருதாமலே தொடக்க முதலே இருவகையினரும் தோட்டேகொப்புக்கொண்டு கல்வி பயிலுதல் நலமெனப் பேசுதல் மிகமிக எளிது. இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்கள் நாகரிகத்தின் உச்சநிலையை எய்தியவை ; அங்குள்ள ஆண்களும் பெண்களும் சமூகக்கட்டுகளில் அகப்படாதுவளர்ந்தவர். என்றாலும் பெண்களுக்கென ஆங்கெல்லாம் தனிக்கல்லூரிகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இந்தியநாடோ பலநூற்றாண்டுகளாய்ப் பலவிதமான கட்டுகளில் அகப்பட்டுவளர்ந்து வருகின்றது. ஒருமைக்கல்வியைப் பாராட்டி வளர்ப்பவர்கள் பெண்களின் தனிக்கல்லூரிகளைக் கண்டனம் செய்ததில்லை. ஒருமைக் கல்வி வளம் பெற்றுத்திகழும் அமெரிக்கா நாட்டிலும் பெண்களுக்கான தனிக்கல்லூரிகள் கூடாதென மறுப்பவரில்லை. அத்தகைய கல்லூரிகள் அங்கு மிகப்பல இருக்கின்றன.

சென்னைநகரிலுள்ள மேரிமகாராணியார் கல்லூரியில் இடம்பெறப்போகும் ஆந்திரப் பெண்மணிகளில் பெரும்பாலர் ஏற்கப்படுவதில்லை. இடத்தின் அருமையும், படிப்பின் சிறுமையும் காரணங்களாகக் கூறப்படுகின்றன. அவற்றுடன் நமக்கு வாதமில்லை.

பல்கலைக்கழகங்களின் கூட்டுக்கழகத்தினரும் (Inter University Board) பிறரும் பெண்மக்களின் நலன்களைப் பேணுதற்கான கலைக்கழகம் ஒன்றனை நிறுவ வேண்டுமென விளக்கியிருக்கின்றனர்.

இவற்றை எல்லாம் உய்த்து நோக்குங்கால் ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையில் பெண்மக்களின் பொருட்டு நடுத்தேர்வுக்கும் மனையறக்கலைக்கும் (Domestic Science) ஏற்ற கல்லூரியின் இன்றியமையாமை வெளியாகின்றது. B. Sc., M. Sc., பட்டங்கட்குரிய பாடதிட்டங்களெல்லாம் மனையறக்கலைகுறித்து ஆயத்தம் செய்யப் பட்டுள்ளன. இம்முயற்சி நிறைவேறினால் பெண்களின் கல்வி திறமைப்படுமென்பதில் ஐயமேயில்லை.

மனையறக்கலையின் அவசியத்தை முதன்முதல் விளக்கினது நாமே. இது பத்து ஆண்டுகளாக நம்மால் விளக்கப்பட்டு வருகின்றது. மைசூர் கல்விச் சீர்திருத்த முறையிலும், பல்கலைக்கழகப் பேருரைகளிலும் மனையறக்கலையை நான் விளக்கின செய்திகளை அறிந்து டில்லியில் மனையறக் கலைக் கல்லூரி ஒன்று தொடங்கியிருக்கின்றனர்; உசுமேனியா பல்கலைக் கழகத்தினரும் இத்தகைய கல்லூரியைத் தொடங்குதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்; வேறு பல இடங்களிலும் இக்கூறிய குறிக்கோளுடன் கல்லூரிகள் தலையெடுக்கத் தலைப்படுகின்றன.

அரசியலார் பெண்மை நலன்களைப் பேணுதற்பொருட்டு மனையறக் கலைக் கல்லூரிகட்குப் பொருளுதவிகள் புரிய விருப்புடன் முற்படவேண்டும். இதற்கான வழிதுறைகளையும், திட்டங்களையும் விவரித்து எழுதிய எனது அறிக்கையை, ஆந்திரப் பல்கலைக் கழகப் பேரவையினர் ஆதரித்து அரசியலாருக்கு அனுப்பியுள்ளார்கள். வழக்கமாய்க் கொடுத்து வரும் $1\frac{1}{2}$ இலக்கம் ரூபாவுக்குமேல் ஒன்றுந் தரமுடியாதென அரசியலார் மறுத்துவிட்டனர். பெசவாடாவில் சிறு நிலையில் இருந்த பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்துவந்த ஒன்றரை இலக்கம் ரூபாவே இதுபோது மிகமிக அகன்ற துறைகளிலெல்லாம் இறங்கி, பருத்த கடமைகளை மேற்கொண்டொழுகும் இற்றைநாளின் ஆந்திரப் பல்கலைக் கழகத்திற்கும் சாலுமென்பது சற்றும் பொருத்தமல்லவே!

—•—

'கரந்தைத் தமிழ்ச் சங்கம்'—இதுபோது தமிழ்நாடு முற்றுமே மதிக்கத் தகும் அரும்பணியை மேற்கொண்டிருக்கின்றது. கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல் வகுப்புடன் அரும்பியிருக்கின்றது; மேலும் நான்கு வகுப்புகள் நாளடைவிற் றோன்றி முற்றுப்பெற வேண்டிய நிலையிலிருக்கின்றது. இதன் இன்றியமையாத அங்கங்களாகிய இசை, ஓவியம், மருத்துவம், சிற்பம் போன்ற தொழிற்கலைகளும் ஈண்டு முகிழ்த்து பிஞ்சு, காய், கனிகளாகி நற்பயன் நல்கவேண்டும். இவ்வெண்ணங்கள் சிறு அளவிலாவது உருப்பெறவேண்டுமாகில் நூறு மாணவர்க்காகிலும் உண்டியும், உறையுளும் தருதற்கான மாணவர் இல்லமும், பத்து ஆசிரியர்களாகிலும் பணிசெய்தற்குரிய வசதிகளும் அமைக்கப்படவேண்டும். ஆண்டுதோறும்

ரூபா ஐயாயிரத்திற்குக் குறையாத வருவாய் தட்டில்லாது வந்து கொண்டே இருத்தல்வேண்டும்.

இதுபோது தொடங்கியிருக்கும் முதல் வகுப்பில் ௰௫ மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். திருச்சி, நெல்லை, கோவை, வட தென் ஆர்க்காடுகள் ஆய, பிற ஜில்லாக்களிலிருந்து வந்தவர் ஒன்பதின்மர் ஆவர். யாழ்ப்பாணத்து மாணவர் ஒருவர் வருவரென எதிர்பார்க்கப்படுகின்றது. மலேயா நாட்டிலிருந்தும் விண்ணப்பம் வந்துள்ளது. இவர்களில் பன்னிரு மாணவர்கள் சங்கத்தார் அமைத்திருக்கும் இல்லத்தே இருந்தும் ஏனோர் வெளியே இருந்தும் கல்விபயின்று வருகின்றனர்.

இதனை உய்த்துநோக்குவோர் இக்கல்லூரி தமிழ்நாட்டிற்கே உரியதொன்றெனவும், இதனைப் பேணிவளர்த்தல் தத்தம் கடமை எனவும் தமிழன்பர்கள் கருதுவர் என்று எண்ணுகின்றோம்.

தமிழ்ப் புலமையும், தொழிற்கலையும் ஒருங்கே பயிற்றப்படும் கல்விமுறை சாலச் சிறந்த நன்முயற்சியாம். இம்முயற்சி உரம்பெறுதற்கு இலக்கிய இலக்கண நூல்களேயன்றி, கலைநூல்களையும் தமிழில் எளிய விலைக்கு வெளியிடுதல் வேண்டும், இத்தகைய பொறுப்புள்ள வேலைகளை மேற்கொள்ளவும், செவ்வனம் இயற்றவும் அறிவாளிகள், செல்வர்கள், அன்பர்கள் ஆதிய அனைவரின் துணையும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது.

தமிழ் நாட்டிலுள்ள எல்லாச் சங்கங்களும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைத்துக்கொண்டு தமிழ்மொழியின் ஆக்கத்தையும் தமிழன்பர்களின் ஆக்கத்தையும் வளர்க்க முற்படுதல்வேண்டும். அன்றியும் தமிழன்பர்கள் எல்லோரும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினராகவும், தமிழ்ப்பொழிலின் சந்தாநேயராகவும் ஆயிரக் கணக்கினர் சேர்ந்து துணைபுரியவும் வேண்டும்.

**காந்தைத் தமிழ்ச் சங்கம்:**—31—7—38 மாலை சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

1. 1936—37; 1937—38 ஆண்டுகளின் கணக்குகளும் சோதனை அறிக்கைகளும் ஏற்கப்பெற்றன.

2. 1938 ஏப்ரல் 15, 16, 17 தேதிகளில் நடைபெற்ற வெள்ளிவிழாவின் வரவு செலவுகள் ஏற்கப்பெற்றன.

3. தமிழ் வித்துவான் தேர்விற்குரித்தாகத் தொடங்கப் பெற்றிருக்கும் கரந்தைத் தமிழ்க்கல்லூரியின் திறப்பு ஏற்கப் பெற்றது.

4. 1938—39-ம் ஆண்டின் வரவு—செலவு திட்டம் ஏற்கப்பெற்றது.

5. சங்கத்தின் தலைவர், அமைச்சர், பொருளாளர் ஆதிய எழு தொழிற் கூட்டத்தினரும், தனிக்கணக்கரும் (Special Auditor) தேர்ந்து நியமிக்கப்பெற்றனர்.

6. தமிழ்ச்சங்கங்களை கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைத்துக்கொள்ளுதற்கான கீழ்க்கண்ட எழு விதிகளையும் சங்கவிதியின் **9a** என்ற அதிகாரத்தில் சேர்த்துக்கொள்ளுவ தென முடிவு செய்யப்பெற்றது.

1. இச்சங்கத்தின் நோக்கங்களுடன் ஒத்த கருத்துடைய வேறுசங்கங்களும் ஆண்டுதோறும் கரந்தைத் தமிழ்ச் சங்கத் துக்கு இணைப்புக்கட்டணம் ரூபா மூன்று தருவதாக ஒப்புக் கொண்டு இச்சங்கத்துடன் இணைத்துக் கொள்ளலாம்.

2. இணைப்புக்கட்டணத்தை ஒவ்வொரு ஆண்டின் முடி விற்குள் செலுத்தவேண்டும்.

3. கட்டணத்தைச் செலுத்தாது ஒரு ஆண்டுத்தொகை நிலுவையாயிருந்தாலும், இணைப்பினுலுளதாகும் உரிமைகள் கிடையாது.

4. இணைக்கப்படும் சங்கங்கள் ஒவ்வொரு உறுப்பினரைத் தேர்ந்து, இங்கு அனுப்பவேண்டும்; இங்கு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற்கூட்ட உறுப்பினர்களும், இணைக்கப்பட்ட சங்கத்தினரால் தேர்ந்தனுப்பப் பெற்ற உறுப்பினர்களும் ஒருங்குகூடித் தமிழின் ஆக்கத்திற்கான வேலைத்திட்டத்தையும் அதனைச் செய்து முடிக்கும் வழிதுறைகளையும் அமைத்து அவற்றை நிறைவேற்றவேண்டும்.

5. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பெறும் நூல்கள் முதலியவற்றை இணைப்புச் சங்கங்கட்கு விலை இன்றியோ, நய மான விலைக்கோ கொடுக்கலாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற் கழகத்தினர் இதுபற்றிய முடிபுகளைச் செய்தற்குரியர்.

6. இணைப்புச் சங்கங்கட்கு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சி முதலியவற்றில் எவ்வித தொடர்பும், உரிமையும் கிடை யாது.

7. இணைப்புச் சங்கங்கள், தாம் செலுத்தவேண்டிய ஆண்டு வரியைக் கொடுக்காமல் மூன்று ஆண்டு வரித்தொகை நிலுவை நின்றால், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற் கழகத்தினர், அச்சங்கங்களின் இணைப்பை அறுத்து விலக்கிவிடலாம்.

இக்கூறிய முடிபுகளில் 6-வது முடிபு தமிழன்பர்கள் மிகவும் போற்றுதற்குரியது.

---

## மதிப்புரை.

'**உடலுறுதி**'— திரு. சுவாமி சுத்தானந்தபாரதிகள் இயற்றி இராமச்சந்திரபுரம், அன்பு நிலையத்தினரால் வெளியிடப் பெற்றது.

உடல்நூல், சுகவழி ஆகிய இரண்டு அறிவுநூற் பொருள் களையும் ஒருங்கே அமைத்து வளம்பெற்ற தமிழில் அனைவரும் சுவைத்து இன்புறக்கூடிய முறையில் எழுதப்பெற்றது. உட லின் அமைப்பு, உடலுறுப்புகளின் செயல், உணவு, யோகம், நோயற்றவாழ்வு இத்தகைய பொருள்களை 42 அதிகாரங்களாய்

வகுத்து, பழங்காலத் தமிழர்கொள்கைகளை மேனாட்டுக் கலையறிஞரின் புதுக்கொள்கைகளுடன் இயைத்துச்செவ்வனம் விளக்கப்பெற்றிருக்கின்றது. அறிவுநூற் பொருள்களைத் தமிழிற் கூறுதற்கு ஏற்ற குறியீட்டுச் சொற்கள் காணுமாறில்லை எனத் தடுமாறுபவர் இந்நூலைப் படித்து விளக்க முறலாம். உடற்கூறுகளை விளக்கும் கலைகளை நன்கு பயின்று, அவற்றின் நுண்பொருள்களைச் சிந்தையில் அமைத்து, தமிழ் மக்கள் அவற்றை எளிதே உணர்ந்து பயனடையுமாறு முறைப்படுத்தி, தானே அனுபவத்திற்கண்ட உண்மைகளை உலகறிய உரைக்கப்பெற்றிருக்கின்றது. பொதுமக்களும், கல்லூரி மாணவர்களும் தினமும் படித்துப் பயன்பெறக்கூடிய அருமையான நூல். இதனை வெளியிட்ட அன்பு நிலையத்தினர்க்குத் தமிழ் மக்களின் நன்றி உரியதாகும்.

இடையறா உழைப்பினாலும் இணையற்ற அன்பினாலும் சுவாமிகள் புரிந்துவரும் தமிழ்த்தொண்டு காலத்தினாற்செய்த பேருதவியாகும். **இதன் விலை ரூபா ஒன்று.**

---

**சொற்பிறப்பு — ஒப்பியல், தமிழகராதி :— I-வது பகுதி :** 1-வது மலர். யாழ்ப்பாணத்து நல்லூர் சுவாமி S. ஞானப்பிரகாசர் அவர்கள் இயற்றியது. **விலை ரூபா. 2—0—0.**

இது சொற்பிறப்பு வரலாற்றினை ஆராயும் முறையில் இயற்றிய தமிழகராதி. தமிழிலும் ஆங்கிலத்திலும் உரை எழுதப்பெற்றது. தமிழ்மொழி, திராவிடக்குழுமொழிகள் ஆகிய மொழிகளில் வழங்கும் சொற்கள் யாவற்றையும் ஆராய்ந்து, அவற்றின் அடிச்சொற்களைக் (roots) கண்டு சொல்லாக்கம், பொருளாக்கங்களை விளக்கப் பெற்றுள்ளது. மொழிநூல் வல்லுநர்கள் உலகமொழிகள் பலவற்றையும் ஆய்ந்துகண்ட மொழியிலக்கணங்கள் அனைத்தையும் செவ்வனம் ஆராய்ந்து திராவிடக்குழுமொழிகட்கும், ஆரியக்குழுமொழிகட்கும் உள்ள ஒப்பியல்களையும், அடிச்சொற்களையும், சொல்லுருவங்கள் வளருமாற்றையும், அவற்றிற்கான இயல்களையும் தக்க மேற்கோள்களுடனும், எடுத்துக்காட்டுகளுடனும் எழுதியிருப்பது ஆசிரியரது பரந்தநூற்புலமையையும், உலைவிலா உழைப்பையும் நன்குதெரிக்கின்றது.

ஒலிஇயல், மொழிஇயல், சொல்லியல், ஒப்பியலாதிய பல திறப்பட்ட ஆராய்ச்சிகள் மலிந்த தமிழகராதி இதுவேயாகும். ஆசிரியரவர்கள் துணிபுடன் கூறும் கொள்கைகள் தமிழறிஞர்களும், மொழிநூற்புலவர்களும் பாராட்டத்தகும் புது விருந்தாகும்.

இந்நூலின் ஒருபகுதி ஆயிரம் பக்கங்களில் முடியும் 20 மலர்களாய் வெளிவரும் இரண்டு பகுதிகளில் முற்றுப் பெறுமெனக்கருதப்படுகின்றது.

இத்தகைய சிறந்தநூல் அறிஞர்களின் போற்றுதலுக்குரித்தாகி இறைவன் திருவருட்பாங்கால் செவ்விதின் முற்றுப் பெறுமென எண்ணுகின்றோம்.

## க. த. சங்கக் கல்லூரி நன்கொடை.

(ஈசுவர கார்த்திகை முதல்—வெகுதானிய ஆனிமுடிய)

சித்தவைத்தியசரபம்.

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. Dr. ஆ. சோதிபாண்டியன் | அவர்கள் | 25 | 0 | 0 |
| ,, க. நடராசன் அவர்கள் B.A., B.L., | | 30 | 0 | 0 |
| ,, N. A. வர்த்தமான முதலியார் அவர்கள் | | 50 | 0 | 0 |
| ,, N. L. சின்னகிருட்டின நாயுடு | ,, | 50 | 0 | 0 |
| ,, N. L. B. ஆழ்வார்சாமி நாயுடு | ,, | 20 | 0 | 0 |
| ,, N. A. அனந்தவிசய முதலியார் | ,, | 12 | 0 | 0 |
| ,, க. நல்லமுத்து நாட்டார் | ,, | 21 | 0 | 0 |
| ,, K. பழனித்துரை | ,, | 5 | 0 | 0 |
| ,, பாப்பண்ணுபிள்ளை அண்டு ஸன்ஸ் | ,, | 2 | 0 | 0 |
| ,, L. K. பிரணதார்த்திகரம் பிள்ளை | ,, | 1 | 4 | 0 |
| ,, V. K. அருணசலம் பிள்ளை | ,, | 1 | 0 | 0 |

## மருத்துவசாலை நன்கொடை.

| | | | |
|---|---|---|---|
| நிக்கல்சன் நகரபாங்கி தஞ்சை | 20 | 0 | 0 |
| ஆச்சியம்மாள் கரந்தை | 1 | 0 | 0 |